1916

தாயுமானவ சுவாமிகள்

திருப்பாடற்றிரட்டு

உ

கடவுள் துணை.

தாயுமான சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு.

இஃது, யாழ்ப்பாணம் மேலைப்புலோலி

நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

சென்னை சூளை:

பி. வே. நமசிவாய முதலியாரவர்களது

நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

சிவமயம்.

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி,

மகாவித்வான்

ஸ்ரீமந். நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

தாயுமான சுவாமிகள்

சரித்திரச்சுருக்கம்.

வணக்கம்.

வாயுமா னவமலமு மறுபிறப்புந் துறவறத்தான் மாறவீசி,
யாயும்வே தாகமத்தி னருள்வலியிற் சிவஞான வாழிமூழ்கிப்,
பாயுமால் விடைப்பரம * னிருவியலும் பார்த்துணர்ந்து பதத்தி
னென்றுந், தாயுமா னவன்றனிரு சரணமலர் சிரமதனிற் றரி
த்து வாழ்வாம்.

புராதனமெய்ச் சிவஞான போதமெனுஞ் சித்தாந்தப் பொருளி யாவுந், தராசுமுனை யாநிறுவிச் சாயாமலநுபவத்திற்

---

* இரு இயல் ஆவன:—தடத்த லக்கணம், சொரூப விலக்கணம் என்பனவாம். இவை முறையே பொதுவியல்பு, சிறப்பியல்பு எனவுங் கூறப்படும்.

றமிழைப் பாடிப், பராவசிய மயமாகிப் பரஞானத் தனிமைெ
றிப் பரிமேலேறி, நிராமய தேயத்தேகி நிறைதாயு மானவனை
நினைந்து வெல்வாம்:

உலகின்கணின்று ஒன்றோ டொன்று முரணி யிகலு
உம் பலவேறு வகைப்பட்ட சமயங்கள் போலாது, சமயாதீத
மாய் முடிந்த நிலையதாகி விளங்கும் **அத்துவைத சைவசித்**
தாந்தத்தை நிலைநாட்டிய தந்தையானவரும், பதிபசுபாசம்
என்னும் முப்பொருளினியல்புகளையெல்லாம் உலகமுணர்ந்து
ய்வான் பெறவைத்தருளிய தாயுமானவரும், எம்மவர்க்குச் சரு
மானவருமாகிய **ஸ்ரீ தாயுமானசுவாமிகளது** திருப்பாடல்கள்கார
ணமாக, அவர் ஒருசமயத்தையுஞ்சாராத போதநிலையர் என
ஓர் சாராரும், தமது விவர்த்தவாதக் கொள்கையை யுடையார்
என ஏகான்மவாதிகளாகிய **மாயாவாதி**களும் மயங்குவாராயி
னர். இருவர் மாறுகோள் ஒரு தலைதணிதல் எம்மவர்க் கிலக்க
ணமா விருத்தலான், அவர் தங்கூற்றுக்களையெல்லாம் அடிக
ளது சரிதவாயிலாகவும், திருப்பாசுரவாயிலாகவும் நடுவுநிலை
யோடாராய்ந்து நிச்சயித்துண்மை காட்டுவான் எழுந்த
தென்க.

வேதங்களாற்பூசிக்கப்பட்டதும், சுத்தாத்துவித சைவசித்
தாந்தம் என்னும் அரசுவீற்றிருப்பதும், புகழாற் றிக்கெங்கும்
போயதுமாகிய திருத்தலம் சோழநாட்டின் றென்கோடிக்கணு
ள்ள **ஸ்ரீவேதாரணிய** புரியேயாம். ஆங்கு இன்றைக்குச் சுமா
230- வருடங்களுக்கு முன்னர், வேளாள வருணத்திலே, உ

...லித் துண்டோர் வகையினருள்தோன்றிய **கேடிலியப்ப**
பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்வி
களின் முதிர்ந்து, குருலிங்க சங்கமபக்தியிற்சிறந்து, தம்பெயர்க்
கேற்பக் கேடிலராய், அவ்வூர்ச் சிவதலவிசாரணைக் கர்த்தரா
யிருந்தார். அதுகாலைத் திரிசிரபுரத்திலே செங்கோனடாத்தி
யரசுபுரிந்த **ஸ்ரீமாந் முத்துவிசய ரகுநாத சொக்கலிங்கநாயு
கர்** என்னும் வேந்தரேறு* பிள்ளை அவர்களது நற்குண நற்
செய்கைகளையும், கல்வி கேள்வி யறிவின்பெருமையையுங் கே
ள்வியுற்று வரவழைத்து, சிறந்த சம்பிரதி உத்தியோகத் தமர்
த்தினர்.

பிள்ளையவர்கள் அரசனது வேண்டுகோட்படி உத்தியோ
கமேற்று, அதற்குரிய கடமைகளைக் குறைவறப் புரிந்துவந்த
னர். அங்ஙனம் நிகழுநாளிலே தமக்கு ஒரேபேறுவாய்த்த **சை
...தம்பாப்பிள்ளை** என்னும் அருமைக்குமாரனைச் சந்ததியி
ன்றியிருந்த தந்தையனார்க்கு முன்னரே சுவீகாரமாகக் கொ
டுத்து விட்டமையால், தமக்குச்சந்ததியுண்டாகத் திருவருள்

---

* பிள்ளை என்பது வேளாளர்க்குரிய காரணவாக்கப் பெயரு
ளொன்று. இறைவனிடத் திருநாழி நெற்பெற்ற காமாட்சியம்
மையார், அதனை விருத்திசெய்தற்குரியார் இவரேயெனத் திரு
வுளங்கொண்டு "பிள்ளையே!" என்றழைத்தமையால் வந்ததெ
னக் காரணங்கொள்க. அது "உள்ளங் குழைந்தா யுழவாற்
பெருக்க விதை-பிள்ளையெனக் கூயுதவப் பேணுங்கை" எனத்
திருக்கை வழக்கங் கூறியதனாலும் பெறுதும்.

செய்யுமாறு * தக்கிண கைலாயத்துள் ஒன்ருய வத்திரிசி மலைக்கணெழுந்தருளியிராநின்ற தாயுமானேசுரரைத் திரிலங்கடோறும் தந்தேவி சகிதமாகச்சென்று ஒருமையுற்ற மெய்யன்புடன் றரிசித்தும், நித்திய நைமித்தி காதிகள்செய்து விரதமநுட்டித்தும், தானஞ்செய்தும் வருவாராயினர். அக்காலே, பரதகண்டத்துள்ளாரது தவமெலாந் திரண்டோர் வடிவெடுத்து வந்தாற்போலவும், மன்பதைகளின் மலவிருதுமிக்க இம்மண்ணுலகிற்ரோன்றுவான் விமலன் விடுத்தருள்வோர் சித்தாந்தஞானசூரியன் மானவும் மகவொன் றவதரித்தது. அப்போழ் தத்துத் தந்தையார் அகமிகமகிழ்ந்து செய் வேண்டியன வெல்லாஞ்செய்து, தாயுமானேசுரர்க்குக் காணிக்கைமுதலியனவுஞ் செலுத்தி, சாதகருமமுஞ் செய்வித்து சோதிடத்தில் வல்லார், "சுபவோரையிலே ஐந்துகோளுமாகத் தோன்றியதனுல் இவர் தேவாம்சமாக அவதரித்தார் என்றும், அனைத்துலகையுமாளவல்ல நரேந்திரனுகிலவவர் என்றுங் கூறக்கேட்ட இருமுதுகுரவர் மகிழ்ச்சியையென்னென்பேம். தாயுமானேசுரர் அருளாலுதித்தமையால் அப்பிள்ளைக்கு அக்கடவுளின்பெயரையே நாமகரணஞ்செய்தனர். அப்பால், **தாயுமானசுவாமிகள்** வடமொழி தென்மொழிக்க

---

* திரிசிராமலை தக்கிண கைலாயத்துள் ஒன்றென்பதை செவ்வந்திபுராணம், தக்கிண கைலாசபுராணம் என்டவற்றுள் காண்க. திரிசிர புரம், திரிசிராப்பள்ளி எனவும்பெயர். இக்காலத்துத் திருச்சினுப்பள்ளி என வழங்கப்படுகின்றது.



இதற்கு மேற்கோளாக அவரையே யிக்காலத்து ம
நிலங்குறக் கண்டேன். அவரது வடிவத்தை உற்றுநோ
க்கினேன்.

அகவடி யுகிர்விரல் புறவடி கரடே
கழலே கணைக்கால் முழந்தாள் குறங்கே
கடிதங் கொப்பூழ் வயிறுதின் வரையே
விடையே மயிரி னொழுக்கே முலையுகிர்
விரலே முன்கை யங்கை தோளிணை
கழுத்தே முகனை செவ்வாய் மூக்குக்
கண்ணே காது புருவ நுதலெனு
மாறைந் துறுப்புட னிரண்டிம் பாதம்.

என்று சங்கப்பாட்டியலிற் கூறப்பட்டபடி, அவரது முப்ப
திரண்டு உறுப்புக்களும் ஆண்டன்மையோடு தெய்வத்தன்
சிறந்து, சாமுத்திரிகா லக்கணங்கள் நிரம்பப்பெற்று விளங்
கின்றன.

அவர் இன்னுஞ்சிறிது காலத்தின் உலகமெலாந் தன்சொ
ல் கேட்ப ஆணைசெலுத்தும் மகைஸ்வரிய மகோன்னத
மகா மண்டலாதிபதியாகிப் புகழ்சிறவலொருதலை. திருப்பே
அவரது காற்சுவட்டிற்பிரகாசிக்கும் பதுமரேகைபோல் எ
க்கு மிருப்பதை யிக்ஞான்றுங் கண்டுகேட்டிலேன். அவர
நெடுஞ்சரங்கள் கணைக்காலின்கீழ்த் தூங்குவது தானுங்க
ணவிரோ? என்றுகூறினன். அது தொடங்கி நாயகன் அவ
த்து மிக்கபிரீதியும் அச்சமுமுடையனாயினன். இருவினை

[illegible]

[illegible]

தரிசிப்பான் சென்றனர். அத்தன்மையுற்ற தாயுமானார் அவரைக்கண்ட மாத்திரையே, தலைவனைக் கண்டுழித் தத்துவமிழக்கும் உழுவலன்புடைப் பதிவிரதைபோலப் பரவசப்பட்டு, சாதகங்கண்ட ஊழிபோன்று தம்மனம் அவர்பாற் படியப்பட்டாராய், அடியுறவணங்கி, "எம்பெருமான்! தந்திருக்கரத்திலுள்ள புத்தகம் யாதோ" வென்றனர். குருசுவாமிகள் யாதொன்றுமுரையாராய் நகினர். பின்னரும் பன்முறை வினவி நிழல்போல் தொடர்ந்தனர் அங்கிடங்கடோறும் சுற்றித்திரிந்து, ஊரடங்கிய யாமம்பதினொன்று நடுநிசையாவிலே தாயுமானவர் சந்நிதிசென்று * பதுமாசனத் திட்டார்ந்த மௌனகுருசாமியார் இவர் பக்குவங்கண்டு "சிவஞானசித்தி" என்றனர். தாயுமானார் அக மிகமகிழ்ந்து, அந்நாளிலே வாதவூரனை ஞானாம்பலத்தானேகந் தொலைத்துச் சாதங்காட்டிப் பாதமலர்த்தந்த பரமபதி, இந்நாளிலெளியேனையும் ஞானசித்தியான் ஞானபத்தியளித்தாட்கொள வெழுந்தருளினேனென்று துதித்து "அருட்கடலே. !

---

* பதுமாசனமாவது யோகாசனத்தொன்று. அஃதாவது இடப்பக்கத் தொடையின்மேல் வலக்காலினையும், வலப்பக்கத் தொடையின்மேல் இடக்காலினையும் மாறவைத்து, இருகைப் பெருவிரலையு மிருகால்களாலும் மாறிப்பற்றி யிருத்தல். அதனை "[illegible]" என்றுங் [illegible] செய்யுளானதிக.



1-சிவம் யாது?

2-ஞானம் என்பதென்னை?

3-சித்தி எது? "என்று வினவ, ஆசாரியசுவாமிகள் அவ ரை நோக்கி, அன்புடையாய்!

1-சிவம் என்பது பதி.

2-ஞானம் என்பது (அந்தப்பதியை உள்ளவாறறியும்) அறிவு.

3-சித்தி ஆவது அவ்வறிவை வருவிப்பது "என்றார் தாயு மானவர்கேட்டுத்" தவராச!

1. அப்பதிப்பொருள் ஊர்குணம் குறிசெயல் பெயர் முத லியன இல்லாதது; சொல்லளவைக்கும் பொருள் அளவை கட்கு எட்டாதது; என்று வேதாகமங்கள் முழங்கவும், தேவ ரீர் அவையிற்றிற்கு முரணாகச் சிவம் என்றல் பொருந்துமோ?

2. சிவமெனவே, அசிவம், (அமங்கலம்) சிவா (சிவம்) (மங்கலம்) என்பனவும் பெறப்படலால் அப்பொரு ளெவை?

3. அப்பொருள்கள் சிவத்திற்குப்பேதமோ, அபேதமோ, பேதாபேதமோ?

4. வியாபகமோ? வியாப்பியமோ? விகாரியோ? அவி காரியோ? நிராரியோ? சுதபோதமோ? இவை அல்லாதனவோ?

5. "உண்மையாய் இன்மையாய் இருப்பதைப் பதி" என்றன்றே அருளிய தன்மையாயின், சிவம் (மங்கலமுடை யது) எனக்கூறல் எவ்விடயோ? என்னே? அமங்கல மங்க லாமங்கலமும் அவனே யாதலால்.

6. மெய்ப்பொருளன்றி யிரண்டாவதுபொருள் இல்லை யென்று வேதங் கூறவும், சிவஞானம் என்பதற்குப் பொருள் சிவனையறியும் அறிவு எனின், சிவன் ஞேயப்பொருளாகவும் ஞானங் காட்சிப்பொருளாகவும் முடிதலால், ஞாதுரு (அறிப வன்) ஞானம் (அறிவு) என்பன வெவை?

7. அந்த ஞாதுரு பரிபூரணனாய சிவனுக்கு வேறாய் நின்று அறிவனோ? ஒன்றாய் நின்றறிவனோ? வேறும் ஒன்றுமாய் நின் றறிவனோ?

8. சிவன் அறிவுப்பொருளேல், அறிபொருளெல்லாம் அவ னாயும், அறிவனையும், விளங்கப்பண்ணுவனாயும், அறிவாறு க்கு வேறாகியும், கண்டப்படுமொழியும் விளங்குவன்மை

யால், அளவும் சடத்துவம், அழிவு, விகாரம், பேதம், கண்டப் பகுவை முதலிய தன்மையனாய், சித்து, சத்து, நிர்விகாரம், அச்சேதியம், அகண்ட முதலியவற்றை யிழக்குமன்றோ ?

9. அறியப்படுதல் கருவி கூடியவிடத்தோ? கழன்ற விடத்தோ? கூடிய விடத்தாயின் கருவிகள் எல்லாம் பசுபாச ஞானங்களாகலின் அதனாலாகக் காணவறியப்படானனே? கழன்றவிடத்தாயின் அறிதலெவ்வண்?

10. சிவம் அறியப்படுதல் ஐயக் காட்சி யானோ? திரிபு காட்சியானோ? மானதக் காட்சியானோ? சையோகம், சையுக்த சமவாயம், சையுக்த சமவேத சமவாயம், சமவேத சமவாயம், விசேடண விசேஷ்யபாவம் என்னும் வகைத்தாய வாயிற்காட்சி யானோ? தன் வேதனைக்காட்சியானோ? நிருவிகற்பக் காட்சி யானோ? சுவார்த்தாநுமானத்தினாலா? பரார்த்தாநுமானத்தி னாலா? பக்கம், விபக்கம், சபக்க விபக்கம், ஒப்பு, பாரிசேடம் உகைக காரணங்களானேயோ?

11. ஞானம் அறிவானுக்கு இயற்கையா? செயற்கையா? இயற்கை யெனிற் சித்தித்தல் வேண்டா; செயற்கையெனிற் சித்திக்கமாட்டா. அஞ்ஞானமு மன்றேயன்றோ ?

12. [illegible] ?

[illegible]

[illegible]

* [illegible]

[illegible]

[illegible]

தறிந்த தன் பொன்னடிக்கே" ஏழிசையா யிசைப்பயனா யின் னமுதா யென்னுடைய தோழனுமாய்" "பண்ணிறை யம் பழத் தினு மின்சுவை-யென்னிறுதி யெனக்கே கனிதரும்-உவளி னின்று முன்றுவிடில் விட்டிடும்" எனவரூஉம் தேவார அருட் பாக்களையும், "நின்றனைக் கருவி யிருள்கடிந் துள்ளத் தெழு கின்ற ஞாயிறேபோன்று நின்ற நின்றனுவாய்த்தேய்ந்தொ ன்றும்" ஆதியந்தமு மில்லாவரும் பெருஞ்சோதியை" என வரூஉந் திருவாசகத் திருவருட் பாக்களையும், "உற்றவர் பெற் றவ ரற்றவர் முற்றும்-அற்றவர்க் கற்றவ னவ்வவர்க்கு" என வரூஉம் இருபாவிருபதின் செய்யுளையும்,

குமர குருபர குணதர நிசிசரர்
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபதி யுரைசெய் சரப்பதி முன்வாரும்...
அமர புவிதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவையறிவது பொருளென அருளிய பெருமாளே.

என்ற திருப்புகழின் திருப்பாவையும் 'எல்லையற்றதைக் கூற அரிதென்னை காட்டுவனவென்ப. அப்பரத்தயன்றோ தாயுமான சுவாமிகளும் தாம் அருளிச்செய்த நூலினுள்ளும்,

"இருக்கவுய்த் திருமுறை யென்ற திருப்பாட்டின்
பெருக்கையைக் கண்டுணர்ந்து பேச்சுமறந் திருக்கலாமோ,"

என்பது முதலாக அவற்றையெல்லா மெடுத்தாண்டு மன்ப ருப் பக்கத்தாரைத் தம்வயப்படுத்தினர். நிற்க, இவ்வுபதேச த்தாலே வைதிக சைவ சுத்தாத்துவித சைவ சித்தாந்தமே உண்மை நிலையென்றும், சிவபெருமானே பரமபதியென்றும், அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவிதமுத்தியென்றும் உணர்ந்து உலகாசையைத் துறந்து முமூட்சுத்துவ முற்றார். **மௌன தேசிகர்**, "நீ இன்னுஞ் சிறிதுகாலமிருந்து இல்லற நடாத்திப் புத்திரனை யீன்றாற்றி, பின்னர் யாம்வந்து நிட்டை கூட்டி யுபாயமளிப்பேம்" என்றனர். ஆசாரியர் பிரிவையாற்று மல் தாயுமானார் வருந்த "சும்மா இரு" என்று அகன்றனர். இவற்றைச், சுவாமிகளது திருப்பாடலில் **மௌனகுரு வணக்கத்துள்,**

சிந்தையற நில்லென்று சும்மாவிருத்திமேற்
சின்மயா னந்த வெள்ளந்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழ்கவரு
ளிய * நந்தி மரபு வாழ்க

---

* நந்தி மரபு ஆவது-தக்ஷிணாமூர்த்தி சிவஞான போதத் தைத் திருநந்திதேவர்க்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரமுனி வர்க்கும், அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும் அவர் பரஞ் சோதி முனிவர்க்கும், அவர் மெய்கண்ட தேவர்க்கும், அவர் அருணந்தி சிவாசாரியார் முதலாயினோர்க்கும், அவர் மறைஞான சம்பந்த ராயனார்க்கும், அவர் உமாபதி சிவாசாரியார்க்கும், அவர் அருணமச்சிவாயர்க்கும் உபதேசித்த வான்முறைவழியாம்.

[illegible]
பண்ணிடுவ[illegible]
வந்த குருவே [illegible]
[illegible] குருவே
மந்திர குருவே யோக தந்திர குருவே மூலன்
மரபில்வரு மௌன குருவே. என்றதனாலும்

"வேதாந்த சித்தாந்த சமரச[illegible]"

'சமயாடைச்சாமல் வேதாந்தசித்தாந்த [illegible]
[illegible]
[illegible]' என்றதனாலும்,

* "[illegible]
[illegible]
கான்குலா தனமு மொர்க்கிட

0 [illegible] விசேடப்படும்" என்றதனா
லும் அறிக.

---

* [illegible]

() [illegible]



இப்பால் ஆசாரியர் சேது தரிசனஞ்செய்து, குமரிமூழ்கிப் பொதியமலை போய் அகத்திய பகவானை யடைந்தருள்பெற்று சிட்டையில் அமர்ந்தனர். அன்றேற் றாயுமான சுவாமிகள் உபதேச மொழிகளையெல்லாஞ் சிந்தித்து அவற்றின்படி யொழுகலாய் விரத்திதோன்ற, இவ்வுலகத்தொழிலை மறந்திருந்தார். சொக்கநாயக அரசன் அவரது தன்மைகளையெல்லாம் கேள்வி வாயிலா லறிந்தும், அற்புதத் தன்மையான பலசெய்கைகள் அவரிடத்து நிகழ்ந்தவை நேரிற்கண்டும், அச்சமும் அதிசயமும் அன்பும் உற்று, அவரை அழைத்து உயர்ந்த ஆசனத்திலெழுந்தருளச்செய்து, சுவாமி! தேவரீரது மகிமைகளை அறியாமையால் என் உத்தியோகத்தில் அமர்த்தினேன். இனிமேல் தேவரீருக்கு யானே குற்றேவல்செய்யப் பணித்தருள வேண்டுமென்றிரந்து, அவர்க்கிலக்கு முட்டிருவண்ணம் ஒழுகினன். சுவாமிகள் * சரியையிற் சரியை சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்பவற்றை யெல்லாம் அநுட்டித்தற்கு கிரியாபாத சோபானமுற்றார்.

---

* சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடல், மெழுக்குச் சாத்துதல், நந்தவனம் வைப்பித்தல், தலதீர்த்த யாத்திரை செய்தல்முதலியன. சரியையிற்கிரியையாவது இடபாரூட, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், உமாமகேசர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகள், விநாயகர், கந்தர்முதலிய ஆவரண மூர்த்திகள் என்பவற்றுள் ஒன்றை வழிபடுதல், சரியையில் யோகமாவது நெஞ்சின்கண் சிகண்ட ருத்திர மூர்த்தியைத் தியானித்தல், சரியையில் ஞானமாவது அத்தியான பாவனையின் உதவிப்பிறக்கும் மெய்யநுபவ வுணர்வு நிகழ்தலாம்.

அக்காலத்துப் [illegible] [illegible]. [illegible]
[illegible]
[illegible]
[illegible] தன் உடல். [illegible]
[illegible] பெருந்துறையை
[illegible] டைத்தருளவேண்டும்" என்று இரந்தனர். [illegible]
[illegible]
[illegible]
[illegible] இராமநாதபுரத்திற்கு எழுந்தருளினர். [illegible]
[illegible] சிவநெறிப்பிரகாசமும், [illegible]
[illegible]
[illegible] விளக்கும்படி திருவருள் செய்தருள வேண்டு
மென்று பிரார்த்தித்தனர். அவர்க்கு [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]. இவ்வகை [illegible]
[illegible].
[illegible]
[illegible]. அந்நூலை [illegible]
[illegible]
[illegible]



ஸந்தம் என்றுமொழிந்தும், பேரறிவாகிய சங்கரனையும் அதற்குத்
தரிய சித்தாந்த ஞானம் முதலாகிய, அநுபூதி என்றுஞ் சொல்
லப் பெறுவதானவுடைமை என்றும், விடயமுதற் சேர்வனவற்றைத்
திரசன்மங்களாம் அதுவே என்றும் சொல்லியும், எல்லாப்பொ
ருளிலிடத்தும் நிறைந்து நின்ற அப்பெரும்பொருளைப் பற்றும்
வியாபகத்துவம் என்னுங் குணத்தையும், வினைக்கட்டறுத்து
பாசப்பிணையை வெறுத்து, அன்பினை பெருக்கு ஞானம் இல
ன்பி உலோபமியத்தில் என்னும் [illegible] முதலியவற்று
டன் தத்துவகூட்டங்களுடன் [illegible] விளக்கும்
சிவஞானம் என்னும் பயிரையும், [illegible] வெளிப்
பட்டு, அத்துவிதப் பெரும்பயனை விளைத்துண்டபின் கவலையை
நீக்குதற்கேதுவாய சைந்திக சைவசித்தாந்தம் என்னும் வெ
ற்றிக்கொடியும், [illegible] நாத
மென்னும் முரசும், பிருதிவிமுதல் [illegible] அசாங்குமர் என்
னுங் கருவிகளைவிளக்கும் உலகமெங்கணுமுள்ள [illegible]
களுக்கு அறிவித்தல் என்னும் [illegible]
டன், எவற்றையும் ஒருங்கே [illegible] அறியும் பேரறிவு
என்னும் ஒரு பெருஞ்சுடர்முடியும், [illegible]
பிறவி வாதனையைப் போக்கி [illegible]
ன்ப [illegible] அந்தக்கரணம் என்னும் வெண்கொற்றக்
குடையும், சமாதி என்னுஞ் சிங்காதனமும் உடையராய், எம்
பத்தி [illegible] அன்பர் என்னும் [illegible] சேனைகளுக் தம்

[illegible] ல்லை,* தன்மாசராய் விளங்கினார் என்க.

[illegible] திரு [illegible] அத்தி [illegible] இராம [illegible] அரு [illegible] என்பர் இருத [illegible] பட்டது. [illegible] பின்னே அவர்கள். [illegible] ஞானபோதினியில் [illegible] வெளிப்படுத்தினர். ஆங்குப் பரக்கக் கண்டுகொள்க.

சரித்திரச்சருக்கம் முற்றிற்று.

---

* [illegible] ஞானாட்டையை, அதனை [illegible] உருவமாய்த் [illegible] சிவஞானபோதச் சூத்திரத்தானறிக.

வெள்ள மருவு விரிசடையான் வேதனைத் தான்வழிபட்டே, யுள்ள மருவத் திருமூல னூரலின் மருவி யொருமையுற்ற லருளுக் கருணை வெள்ள மாரிபொழிந்தே மறைமுகைகட்ப், பகீலை மூலவ னருண் முகிலாய்ப் பெய்தான் கருணைத் தமிழ் மழையே. (௧)

திருமூலன் மாயினெழுங் குருமணி திருவருளோத் திட்டி வாரி, யருளூறு மாணிக்க வதங்குதிச் சாரலெல்லாமுருக்கி நாலு, மருளோடு மிருளோட மறைக்காட்டி னெழுந்தாயுமா னேறன் ஞானப், பொருளாருஞ் சித்தாந்தத் தமிழ் மழையை யுழையுமுயப் பொழிந்தான்மாதோ. (௨)

சிராப்பளிமா மலைமேவுஞ் செல்வத்திப் பெருமானருள் செய்ய வாங்கிப், பராபரமு மெக்காளுற் பைங்கிளியும் பலடாவும் பாடிப் பாடித், தாரதலமா னூடர்க்கெல்லாந் தன்னெழுதாத் தந்தருளுந் தாயுமானே, சாராய மறு மருள்பெரிய சவிதையிறுற் பொறுந்தே விரிந்துளர்ப்பாம். (௩)

துன்னேயத் தனுமாய்க் குருவாய்த் தோன்றி மலர்ப்பின்னே முனைவன் மெய்யருளான், மன்னுயிர்த்தெய்வத் தமனைருளுதிய மதிப்பிலே ஞெய்திட தருமோ, தென்னையிலே பிதாண்பை திருக்கும் பிறக்குமா வெடுத்தனன் வேதின், தென்மைதாழ் திட்டிருமைராலை மெய்ப்பிரான புகழுரைத் திட ற்கே. (௪)

சரவணச் சடையா னிருமவன் வாத வீட்கை சம்பந்தோ கோன், சிவக்கருணைத் திருவருள்வாரித் திருவுரைத் தாட்டு டுத் தெய்வ, வாமுச் சுவைத் தாயுமானவந்த வருந்தமிழ்ப் பெருமையென்னனவோ. பாரிளர்ப்பங்கொ லெடுத்தமை விடம் பருவ விளிவிளிப்பார். (௫)

சிவமயம்.

நூலினுட்பிரிவு.

யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

இந்நூலாசிரியர் மேலே [௨-வது பாட்டில்] "பெரிய பொருளைப் பணிகுவாம்" என வியந்து வாழ்த்துச் சொல்லிய சிவத்தின் வியாபகமுதலியவற்றைத் தொகுத்து "முடிந்தது முடித்தல்" என்னும் உத்தியால் கூறலான் எடுத்துக்கொண்டது இச்செய்யுளின் கருத்தாம்.

அங்கு இங்கு எனாதபடி என்பது:— அண்டபிண்டங்களாகிய சேய்மைக்கணுள்ளதெனவும், அன்றிப் பூமி பாதலங்களென்னும் அண்மைக்கணுள்ளதெனவும் சுட்டியுரைக்கப் படாமை.

இனைப்பற்றி உலகு எனவுங்கூட்டி அகத்திற்கு இடைவெளியின்றி யுள்ளதெனவு முரைக்க.

'என்னாத' என்பது 'எனாத' எனத் தொக்குநின்றது.

எங்கும் ப்ரகாசமாய் என்பது:— மேல், கீழ், நடுப்புறம், வி, பக்கங்க ளனைத்திலும் பரந்து நிற்கும் பேரொளியாகி,

ஆனந்த பூர்த்தியாகி என்பது:— அவ்வாறே யகண்ட பூரணானந்தமாகி.

ஆனந்த பூர்த்தி — வடசொற் புணர்ச்சியாதலின் இயல்பாயது.

அருளொடு நிறைந்தது எது என்பது:— தனது திருமேனியாகிய பேரருளொடு விபுவாயுள்ளது எப்பொருள்?

ஒடு உருபு "கட்டிய விரண்டாக்கை ஞானருளோ டெழுந்தது" என்றாற்போல ஒற்றுமைப் பொருட்கண் வந்தது.

அருள் ஆவது - அதன் ஞானசத்தி; நிறைவு ஆவது - உதியாமல் முக்காலத்தினும் உள்ளதாகி, ஓங்கிப்போமல், குறையாமல், இடைபடாமல், அசைவின்றிப் பரந்திருக்குந்தன்மை. இதனைப் பூரணமென்றும் விபுவென்றும் கூறுவர். இந்நூலாசிரியர் பிறவிடத்திலே "அண்டபிண்டந் தடங்கவொரு நிறைவாகி யானந்தமானபரமே" என்றும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்றும் பலவிடங்களினும் கூறியவாறுணர்க.

அன்றியும், அக்குவி பெருகிய அர்ச்சைக்கண்ணும், இக்குவிலர்ப்பனைத் தொடாவிய இச்சைக் கண்ணும் எனவும் ஒன்றும். அருள்சத்தி உண்மைக்கண்ணுமெனக் கூட்டியுரைக்க. எனவே, அண்டத்தவ பிண்டத்தவமுதலிய அனைத்திடமு மாமென்பது பெற்றாம். அவையாவன: பிருதிவியண்டம் - மூல

லோகமுதல் சிவலோக மனைத்து முலோகமும், மேலண்ட கடாகமும் பிரமாண்டமும், மேல் அப்பு தேயு வாயு ஆகாயங் களாகிய அண்டங்களும், இவைக்குமேற் பிரகிருதியண்டமும், மேல் அராகம் வித்தை கலை நியதி காலங்களாகிய அண்டங்க ளும், மேல் அசுத்தமாயையும், அதன்மேல் சுத்தமாயையிற் சுத்தவித்தை மாகேச்சுரம் சாதாக்கியங்களும், அவைக்குமேல் பாவித்த பாகதங்களும், எண்பத்தொராயிரம்யோசனை கன முள்ள பூமியும், கனிட்டபாதலமும், கீழே ஆடகேசுரர்க்குப் புவனமாகிய ஏழுபாதலங்களும், கூர்மாண்டமென்றும் உருத் திரபுவனமுமாய் அண்டகடாகமுட்பட்ட புவனமும், இன்ன அண்டங்க ளனைத்திற்கும் ஆதாரபூதமாய்ச் சிவசத்தியான ஆதாரசத்திக்கும் அப்பாலும் சிவத்தின் பூரண அளவு எல்லைப் படாததாதலால்,

"ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்சோதி"

எனவும்,

"அப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காண்"

எனவும் பெரியருரைத்தவாற்றா னுணர்க.

அங்குள்ளது எனின் இங்கில்லதெனவும், இங்குள்ளது எனின் அங்கில்லதெனவும், அங்கிங்குள்ளது எனின் எங்கு மில்லதெனவும், எங்குமுள்ளது எனின் எற்றைக்குஞ் சாட்சியாயிரு க்கிறதெனவும் ஐயப்பொருட்கு இடமாகாமே "அங்கிங்கெனாத

டை யென்னும்பிரகாசமாய் அனந்தசத்தியாகி" என வருமாற்றுங் கூறினர்.

அனாதி முத்த சித்துருவாகியபதிக்கு அருளே திருமேனி என்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்திரம்-௧. பா-௪௭.)

"உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந்
தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்கினனமலன்றானே."

மற்றும் வருவனவற்றுங் காண்க.

தன் அருள் வெளிக்கதே என்பது:— அவ்வனந் தனது அருளாகிய வெளியினிடத்தே,

கடவுளின் பொதுக்குணங்களெட்டில் ஒன்றாகிய **பேரருளுடைமை** யெனும் பெயரைக்கொண்டு "அருள்வெளி" என்றனர். இதேபரவெளி. சிதாகாசமென்பதும் சிதம்பரமென்பதும் அதற்கே பெயராம். இதினின்றும் **அண்டவெளி** தோன்றி, யதினின்றும் **மனவெளி** தோன்றித் தோற்றமுறையானே யொடுங்கும். மனவெளியென்பது மனம் விரிந்த இடம். அண்டவெளியென்பது ஒவ்வோரண்டத்தைச் சூழ்ந்திருக்கும் வெளி. பரவெளியென்பது எல்லாவற்றையுந் தன்னுளடக்கியிருக்கும் வெளியாம்.

அகிலாண்டகோடியெல்லாந் தந்தம்பதத்த என்பது:— அனந்தகோடி அண்டபுவனங்கள் முதலும் பரிணமித்துத் தோ குமாறு,

இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த் தழைத்த தெது? என்பது:—அருளைக்கருதி இச்சையைவைத்து உயிர்கட்குள் உணர்வாகி விரிந்துள்ளது எப்பொருள்?

அருள்வெளி என்பது தனது சத்திரூபமாம்; ஆகவே தனது சங்கற்பமாத்திரத்தாலே எல்லாவுலகங்களும் தோன்றி விரிந்து அடங்குமென்பதாயிற்று. தனது அருள் ஆதியிலொன்றாயிருந்து, பின்னர் இச்சை ஞானம் கிரியைகளாகி, முன்னரிய மலத்தான் கட்டப்பட்டுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்தற்பொருட்டு வைத்தகிருபையை "இச்சை வைத்து" என்றும், தனது ஞானசத்தியால் அவர்களது அறிவைவிளக்கி அறிதலை "உயிர்க்குயிராய்" என்றும், கிரியாசத்தியால் அவர்களுக்குத் தநுகரணபுவனபோகங்களைத் தருதலை "தழைத்தது" என்றும் கூறினர்.

ஆன்மாவும் இச்சை ஞானக் கிரியைகளை உடையதாயினும் அவற்றை ஆணவமாகிய மலம் மறைத்து நிற்கும். மெய்ப்பொருளின் சத்திகள் மூன்றும் மறைக்கப்படாமல், தாம் தமக்குள் நின்றுமையாக ஆன்மாவுக்குள் அவ்வனவையும் பொருந்தியே க்கொளிர்ந்து, அதற்கும் சீர்க்கப்படாமல், தன்னொராது பதி க்குயிராக நிற்பது இறைவன் அவ்விரண்டிற்கும் வேற்றுமை எனக்காண்க.

ஞான சத்தியின்றி யாண்டும் பிறிதோரிடமின்று தலின் "அருள்வெளிக்குளே" என்று சேர்த்துப்பொருளிற் கூறினார்.

"இச்சையைத் துயிர்க்குயிராய்த் தழைத்தது" என்றதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-க. பா-சுரு.)

"ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கருணை யாகும்
என்றலோ ஞான சத்தி யானையக் கறிவ றுதன்
அன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகிலமெல்லாம்."

தன் சத்தியின்கண் ஐந்தொழில்களும் நிகழுமென்பதற்கு உதாரணம்:—

(திருவிளையாடற்புராணம், பாயிரம்.)

"பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப்போத வின்ப
மாவண்ண மெய்கொண்டவன் றன்வலியாணை தாங்கி
மூவண்ணறன் சந்நிதியிற் றொழில்செய்ய வாதி
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையைவெல்வாம்."

மன வாக்கினில் தட்டாமல் நின்றது எது? என்பது:— மனத்தான் இத்தன்மைத்தென நினைத்தற்கும், வாக்கால் இன்னதென வுரைத்தற்கும் இயையாவண்ணம் அந்தமாய் நின்றது எப்பொருள்?

இனம் சேர்க்கை சாயத்தாலும் பற்றற் கையாதெனவும் உரைக்க. இதனுல் நிர்குணமெனும் தத்துவ மூன்றிற்கும் மேலாய் நிலைபெற்றுள்ளது அப்பொருள் என்றதாம்.

இந்திரியாணங்களினும் அப்பொருள் தங்கியிருந்தும் அப்படி தங்கியிருப்பதை யுணராமை விருப்பதற்கேயிர, தன்னை விசேஷித்தால் தட்டுப்படாமலும் கூடவிருக்கின்றதினால்.

உள்ளேநின்று சங்கற்பவிகற்பங்களைச்செய்வதால் மனம் என்றும், இந்திரியங்களைப்புறத்தே விடயங்களிற் செலுத்துவதால் அசலம் என்றும் கூறப்பட்ட மனம் பிரகிருதியில் தோற்றம். சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்றும் நான்குவாக்குகளும் விந்துவில் தோற்றம். இவையெல்லாம் பசுபாச ஞானங்களின் வழிப்பட்டு இயங்கிப்பின்பு பதிஞானம் மேற்பட்டெழும் எழுச்சியின்கண் கீழ்ப்பட்டடங்குபாதலால், அவற்றில் "தட்டாமல் நின்றதென்று" என்றார். இந்த நின்மலதுரியம். இந்நிலையின்கண் மனச்செயலும் வாக்கின்காரியங்களும் இல்லையாய் நிற்க, மேல் அவற்றோடு சிறிதுந் தாக்கற்றதாய்ச் சிவம் அதீதமாகி நிற்கும் என்பதாம்.

வாக்கு நான்கனுள் சூக்குமை விந்துவினுள்ளே அரும்பும், பைசந்தி இதயத்துள் மயின்முட்டையுட் சலம்போன்ற மலரும், மத்திமை கண்டத்துள் சவிகற்பமா யுணரத்தக்க ஒலியாய்க்காய்க்கும்; வைகரிவாயினின்றும் செவியிற்கேட்கப்படுவதாய்ப் பொருள்தரு மொலியாய்க்கனிந்து வெளிப்படும்; இவை வாக்கின் உற்பத்தியாம்.

மனவாக்கு முதலியவற்றிற் கட்டாதது என்றதற்கு உதாரணம்:—

[திருவிளையாடற் புராணம்-நான்மாடக் கூடலான படலம்.]

“பூதங்க ளல்ல பொறியல்ல வேறு
புலனல்ல வுள்ள மதியின்
பேதங்க ளல்ல விவையன்றி நின்ற
வெளியென்ப கூடன் மறுகில்
பாதங்க ணோவ வளையிற் றுநிதி
பகர்வாரை யாயு மவரே.”

மற்றும் வருவனவற்றுட் காண்க.

மன வாக்கினில் கட்டாம னின்றதற்கு மற்றொரு பிரகாரமாக வுரைப்பினுமாம், அஃதாவது:—மனம்-மானதக்காட்சியும், வாக்கு-(வேதமுதலிய வாக்காகிய) நூல்களும், இவைமுதலிய அளவைகளானும் பற்றப்படாதது என்பதாம். வாக்கிலும் என உம்மை விரிக்க.

“ஆசிலாசார தபோதன ரின்புறு
வாசகாதீத மனோலய பஞ்சரன்.”

என்றதனாலுமுணர்க.

சமய கோடிகளெலாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது?

என்பது:—பல்வேறு சமயங்களெல்லாரும் தமது தமது தெய்வமென்றும், எமது எமது தெய்வமென்றும் முறையிட்டு, அவ்வெவ் விடங்களிலும் ஒருவரையொருவர் விடாதுபற்றி எதிர்த்து வாதித்திடுமாறும், அவ்வச் சமயங்கடோறும் அவரவர்கடவுளராய் வீற்றிருப்பது எப்பொருள்?

எல்லா மென்பதில் உம்மை தொக்கது.

'வழுக்கிடமும்' என்றதால் அனைவரும் சிந்திக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் நின்றது என வுணர்க.

பல்வேறு சமயங்களாவன :— உலகாயதம், பௌத்தம், சமணம், மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சராத்திரம், இவை புறச்சமயம், சைவம், பாசுபதம் வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம், இவை உட்சமயம்; இன்னும் காலவைவாதமுதலிய பலவுமாம்.

இச்சமயங்கள் பலவாறு வாதிக்குந் தொடர்பனைத்தும் எண்ணிச் சொல்லப்புகின் வரையறைப் படாமையின் அவற்றுட் சில சிலவே சுருக்கியெடுத்துக் காட்டுதும்.

உலகாயதன் பிரபஞ்சத்துக்குத் தோற்றமு மொடுக்கமுமின்றி அநாதியே தோன்றியழியு மெனவும், வேறொருகர்த்தா அதனையுண்டாக்கிக் காரியப்படுத்த வேண்டியதில்லை எனவும் வாதிக்க, சித்தாந்தி அவைகளை மறுத்துரைப்பது.

பௌத்தரிற் சௌத்திராந்திகன் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய பஞ்சகந்தச்சார்பால் எல்லாந் தோற்றமென வாதிக்க, பிறனொருவன் கருத்தாவன்றி ஒன்று நிகழாது என மறுப்பது.

காலவாதி காலமே கர்த்தா என்று வாதிக்க அதனை, மற்றொருவன் மறுப்பது.

நையாயிக வைசேடிகர் பரமாணுவிலே பரிணமித்த பிரபஞ்சம் அழிந்த பரமாணுவான பின்னும் ஆத்மாவின்கண் மத்தாக் கூடப் பிரபஞ்சமாகத் தோன்றி நின்று அழிந்திடும் என்றுவாதிக்க அக்கன்மமும் அணுவும் அசேதனமாதலால் முறையறிந்து தாமாகவே தோன்றவியாது அவ்வணுருபமும் பிரளயத்திலே அழியும் என்றும், இப்பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம் மாயையே என்றும் வாதிக்க மற்றொருவன் மறுத்துத் தனது கொள்கையை நிறுத்துவது இங்ஙனம் பலவாறு வாதிக்கப்படுவனவும் மறுக்கப்படுவனவுமாம் இவைமுதலியன சமயகோடிகளின் வழக்குகள்.

சைவத்திற்குத் தாண்டவ பூஷணமென்னும் மூர்த்தியாயும், பாசுபதத்திற்குத் திருநீறுஞ் சடைமுடியுந்தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கு என்புமாலை தரித்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்குப் படிகமும் புத்திரதீபகமணியுந்தரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்கினியும் உபவீதமுந்தரித்த மூர்த்தியாயும், வைரவத்திற்குத் தமருகமும் சிலம்புந்தரித்த மூர்த்தியாயும், பாஞ்சராத்திரத்திற்குச் சங்கமுதலிய ஐம்படைதரித்த

மூர்த்தியையும், சாக்ஷாத்திருக்கும் சத்திமூர்த்தியையும், இவ்வாறும் பௌத்தாதிகளுக்குப் போதரன் முதலிய மூர்த்திகளையும், விர்ர்திருந்து, அவரவர் விளைக்க வடிவெங்கு நின்று வண்ணியாங் செய்தவித்தும் தொந்தத்தில் முத்தி பரமன் அருளியம் விளக்குவது இங்கே அவ்வச்சமயங்களிலும் சென்றது என்பது அங்ஙனம் தமிழ்வேதமாகிய தேவாரத் திருவருட்பாவும் " நின்ற சமயங்களி னவ்வவர்க்கப்பொருள்கள்-வேரென்றிவாற,, என முழங்குதலாங் காண்க.

எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளது எது?

என்பது :— இவ்வாறு யாண்டும் 'அநாதி பெருமையாயுள்ள பூர்ணாகி, எவ்வகைத் தொழிலினும் வல்லதாய், ஒப்பற்ற சித்துருவாகி, பேரின்பவடிவாகி, எக்காலத்தும் நித்தியமாயிருக்கின்றது எப்பொருள்.?

ஓரிடத்தும் ஒருகாலத்தும் ஒருவாறும் ஒருவாறுறும் அவரவர் கொள்கைகளும், உற்தேசம், இலக்கணம், சொற்கே இவைமுதலியவற்றுல் வாதிக்கப்பட்டும், அநாதிக்கப்பட்டும், தோல்வி வெற்றிகளுண்டாயத்திதல் ஒழிவு பெறாதல் அறுவையாதல் பற்றிப் 'பெருவழக்கு' எனப்பட்டது. ஒரு பொருள்பேல் இருவர் மாறுகொண்டு செல்லும்வழக்குப்போலாது, இது அவரவரும் அங்கங்கு அவ்வக்காலத்துக் தத்தம்பலவேறு கொள்கைகளை மேற்கொண்டுசெல்வதாம்.

[illegible] தொழிற்கு வல்லது என்பது — சிருட்டி—படைத்தல், திதி-காத்தல், சங்காரம்-துடைத்தல், திரோப வம்-மறைத்தல், அநுக்கிரகம்-அருள்செய்தல் என்னும் ஐந் தொழிற்கும் வல்லமையுள்ளவர். எல்லைப்பட்ட தொழில்க ளை [illegible].

[illegible] காரணம் என்பவற்றும் [illegible] உயிர்கட்குத் தநுகரண புவ ன போகங்களைத் தருவது படைப்பாம்.

தநு—எண்பத்து நான்குலட்ச யோனியாம்.

கரணம்—[illegible].

விடயாதிகளை அறியுந்தன்மை [illegible]மாம்.

[illegible] போகங்களை [illegible] முன்காலமாக, அவ ற்றை விளைவிக்கத்தக்கதாயும் உயிர்கட்கு இச்சையாதி மூன்றையும் எழுப்புவதாயும் தன்னையும் விடயத்தையும் வேற்றுமை மதிப்பிக்காமல் மயங்கச்செய்வதாயும் இருக்கி ன்றது [illegible].

[illegible] இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்தி நிபா தமும் [illegible] முத்தியிற் சேர்ப்பது [illegible]மாம்.

[illegible] பொருந்தி நடத்தும் புவனங்கள் இரு [illegible].

போகங்களாவன-சிவிகை குடை தேர் யானை குதிரைக ளும், அறுசுவை மாதர் கீதம் முதலியனவுமாம்.

இவைகளுக்குச் சிரத்தையுங் கரணத்துவமும் யான் என் றும், புனபோகங்களை எனது என்றும் உயிர்கள் கருதக்கா திகளை யநுபவிக்கச்செய்தல் காத்தலாம்.

உயிர்களால் காணப்பட்டவற்றை ஒழிக்கல் அடைத்தலாம்.

இவற்றைப் பலனாளுமன்றும் வெளிக்காமல் குறிப்பித்தல் திரோபவித்தலாம்,

பின்னர்ச்சத்தியமும் அசத்தியமுமாகிய பொருள்களைப்ப குத்துத் தெரிவிப்பது அநுக்கிரகித்தலாம்.

இங்ஙனம் எண்பத்து நான்கிலக்ஷபேதமான உடல்களினிட த்தே பரமாத்மா ஐந்தொழில்கள்செய்வது ஆவியென்றும், அத்தாவரவுடலில் அவத்தைக் கருவிகளில் ஐந்தொழில்கள் செய் வது குற்றம் என்றுஞ் சொல்லுவர்.

காரண பஞ்சகிருத்யம் குருமுகமாக வழிபட்டுக் கேட்டுச்சிந் தித்துத் தெளிந்து நிட்டைகூடி அநுபவிக்குவதாகலான், அம்முறையை அவ்வாறு உணர்ந்து கொள்ளத்தக்கது. இவ் வண்ணம் வல்லவல்ல சத்தும், சித்தும், இன்பமும் தானே யாம்.

இங்ஙனம் சத்து, சித்து ஆனந்தமாகிய தனக்குச்சச்சிதான ந்தனெனப் பெயராம்.

என்றைக்குமுள்ளது, எனவே அப்பொரு ளில்லாத நிலையில்லை யென்றாயிற்று.

மேல் கங்குல் பகல் அற நின்ற எல்லை உளதாளது? என்பது, சத்திநிபாதத்தின் கண் இரவும் பகலும் இல்லையாக நின்றதொருநிலைக்களத்தே தானேயாயுள்ளது எப்பொருள்?

மேல், என்பது வினை ஒப்பு மலபரிபாகத்துக்கு மேற்பட்ட இடம். அதுவே சத்திநிபாதமாம்.

ஆன்மா, பயனின் முயற்சிகளையும் தேகபோகப் பற்றுக்களையும் முற்றத் துறந்து பிறிதொருபயனையுங் கருதாமல், தத்துவங்களைச் சடமென்றறிந்து எழுந்து, சத்தும் அசத்தும் பகுத்துணர் சத்தாயது ஆன்மா வென்றும், அவ்வாறு காட்டியது அருளென்றும் உள்ளுணர்ந்து, அவ்வருளைப் பற்றுதலாலும், நிட்டையிற் பெயராது நிற்றலாலும், முறையே மாயை கன்மங்களுக் கிடமாகிய சகலாவத்தையையும் ஆணவத்துக் கிடமாகிய கேவலாவத்தையையும் நீங்கின இடமாகிய சுத்த நிலையின்கண் போதஞ் சிறிதுந் தோன்றாமனிற்க, பலகோடி சூரியர் ஓரிடத் தொருங்கு தோன்றினாற்போல நீக்கமற நிறைபேரொளியாய்ச் சடசித்துக்களின் உள்ளும் புறம்புமாகிப் பூரண சிவநிட்கள சொரூபமாக எங்கெங்கும் பரந்து விளங்கும். இச்சுத்தநிலையே இராப்பகலற்ற இடமெ

ஞ் [illegible] சிறப்புநிலைப்பற்றிட [illegible], இன்னும் பல பாகுகளும் பெரியோர் கூறுவர்.

இவ்வியற்கைக்கண் [illegible] திருவருட்பிர கருணையும், மெய்த்தவமும் [illegible] போதத்தின் [illegible] முத்தாண்மைக்கட் இவைப்புமென [illegible] கூறுவர்.

இவ்வியல்பே [illegible] கருணை சன்மார்க்க நெறியாம். [illegible] கட்டறுத்த [illegible] பாச [illegible] ஒருமையாம் இய ல்பு.

இதுவே ஞானவரம்பும், மௌனநிலையும், போச வநுபூதி [illegible] (கூர்மை)

(கொன்றைவேந்தன்.)

"மோனமென்பது ஞானவரம்பு"

கந்தரநுபூதி.

"[illegible]
வேணசா முருகா நிலைதல் பருளா
[illegible]
போசவநுபூதி [illegible]"

மற்றும் பலவாறும் காண்க.

தனக்கு வழிந்த தலைவரை உற்றுநோக்காமல் ஏற்றுமைக்கெதிரிலே. அதனை மாதவரா? சொன்னதைக் கேட்டுக்கொண்டு மதியுடையுள்ள இனி சக்கரவர்த்தியை மன்னிக்க ஜாசைக் கூடி வேதனையின் தேக்கி முத்துக்கொண்டு கோக்கி விருத்தமன், தனதேதாக் கவலையை யுற்றான். ஒரு காலிற் கண்டுகொண்டுள்ளதை குறித்தொளிக்க பெருதிமாறாடு மனைவிக் குழந்தைக்கு தநுழா, அக்கோபிக்க "அருக்கவே" என்று அதனையுணர்ந்தான் அரசர்க்கரெனப் புதியவர்கள் அக்காசிராஜத்தையுறுத்தக்க வாழ்வை" என்று வருந்தி வழிப்பிரிந்து தாம் மனக் குறிகோளைப்பற்றி யழித்தொண்டு, இடைக்காலன்னியவர்கள் நேடரித்த பலசாலி அதற் மைந்தெதிரின் மாவைப் பிடித்து அரிந்திட்டது சென்று அரசரினைக்கொண் மைந்தனை அன்னோடு கொள்ளக்கிடாக்கினை கோக்கிக்கொண்டு வீரத்து அக்கினைவரைந்து, மந்திரத்தினை ஓதவிய புரவலனைக் கண்டு, உறைந்தேறி, அவன் தனைப்பெற்று அவன் அரசியனைத்தின்று நீடு வாழும் பெருமூச்செறி அக்காலையக்குக்கை, கொடுமையினைக்காண காணியை நோக்குவோகான். இதற்குடல்லாளுமியைக்கு மனோதுமுவெற்றுண்டாகின்றதுன். அதன் பெருமையைக் கருதி அக்கொடுமையையும் வருந்தியும் செய்யாது.

இக்குறள் பத்துப் பெரியோர் கோவிற்குறைவிய திருப்பதிகளொடு மெய்த்திக்காய் அந்தாகங்களின்

திருவெல்லையைமுன்னர் வணங்குமியல்பை அடியார் புராணந்தோறும் புராணகர்த்தர்கூறியிருப்பது ஆம் முறைபிறழ்வின்றி முத்தியெனெல்லைக்கும் முத்திப்பதிக்கும் அனுக்கமான அநுசந்தான முள்ளதால், "எல்லையுளது" என அக்குறிப்புண்மை புலப்படுத்துவான் நூலாசிரியரும் போற்றினர்போலும்.

"அது கருத்துக்கு இசைந்தது" என்பது:—அவ்வாறாய மெய்ப்பொருளுணர்ச்சியே பதிவர்க்கம் பசுவர்க்கங்களின் கருத்தெவற்றிற்கும் ஒப்பாமுடிந்தது.

"அதுவே கண்டன எலாம்" என்பது:— அம்மெய்ப்பொருளே தூல சூக்குமங்களாற் காணப்பட்ட பூத பௌதிகங்களாகிய விடயபதார்த்தங்களனைத்தும் ஆதலால்,

இஃது அசுத்த நிலையிற்காணப்படுவதாகிய ஞேயமாம். ஆகவே சுத்தநிலையிற்காணப்படும் ஞேயமும் ஒன்றுண்டென்பதாயிற்று. இச்சுத்தநிலை மேற்கூறிய திருவருளையே கண்ணாகக்கொண்டு யாண்டுங் காணப்பட்டவனைத்தும் சிவமேயாகவும், பிறிதொன்றின்றாகவும் காண்பதாம்.

உதாரணம்.—

'நவிலுங்கால்மேல்கீழ் நடுபக்கமெங்கும்
சிவமொழிய வேறில்லை தேர்."

என்பதனையும்,

“பார்ப்பனவெல்லாம் பரமாயறிதல்
லிப்படிப்பேரறி வுடையோர் திறனே.”

என்பதனானும்,

சிவஞானசித்தியார், சூத் - அ. பா - ௩0.

“அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினா லறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகிற்
பிரியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாயே.”

மற்றும் வருவனவற்றானுங் காண்க.

“மோனவுருவெளியது ஆகவும் கருதி அஞ்சலி செய்குவாம்” என்பது:—அம்மெய்ப்பொருளை மௌனரூபமான வெளியீடாகவும் தியானித்துக் கைகூப்பி வணக்குதல் செய்வாம். எ-று.

“வெளியது” என்பதில் “அது” பகுதிப்பொருள் விகுதி. “வெளியதாகவும்” என்றதால் எங்கும்பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி யருளொடுநிறைந்ததாகவும், இச்சைசமயத்துயிர்க்குயிராய்த் தழைத்ததாகவும், தட்டாமணின்றதாகவும், வழங்கிடவுநின்றதாகவும், என்றைக்கும் உள்ளதாகவும், எல்லையுள்ளதாகவும்,

அதுவே கண்டனவெல்லாமாகவும், தனித்தனிச்சுருதி அஞ்சலிசெய்குவாம். அன்றியும் கடையிற் கூறியவா றனைவருஞ் சுருதியஞ்சலிசெய்குவாரெனவுமுரைக்க.

இவ்வாறு கூறியவாற்றான் ஆகாரங்களைக்கடக்கும் அதீதமாகிய நிராகாரப்பரமகுருவை (தக்ஷிணாமூர்த்தியை) அஞ்சலிசெய்தமை கண்டுகொள்க.

அதுவன்றி இந்நூலாசிரியர் தாம்சொல்லப்புகுந்த சுருதிகுரு அநுபவங்களையும் அவற்றின் பயனையும் அருட்சார்பாய்நின்று ஒருவாற்றானுணர்த்துமதாகிய இந்நூல் இனிது முடிதற்பொருட்டு "ஆகார புவனம் சிதம்பரரகசியம்" என்னுந்தொடர்நிலைக்கண் "என்றுணைமுன்காட்டி" சௌபானபக்ஷங்காட்டி "மந்திரஞ் சிக்ஷைசோதிடாதி மற்றங்கநூல்வணங்கமௌனமோலியயர்வறச்சென்னியில்வைத்து ராஜாங்கத்திலமர்ந்தது வைதிகசைவமழகிதந்தோ!" இதுவன்றித் "தாயகம் வேறில்லையிக்கோ" "அருளைக்காட்டத்தக நெறியிந்நெறியேதான் சன்மார்க்கம்" என்றும், சின்மயானந்தகுரு என்னுந் தொடர்நிலைக்கண் "சித்தாந்த முத்திமுதலே" என்றும், இன்னும் பலவிடங்களினும் பரிச்சேதஞ்செய்தபடி இவ்வாசிரியர்க்கு வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தமே சிறப்புடைத் தாதலால் அஃதொன்றே உடன்பாடென்பது பெறப்படுகின்றது. உதாரணம்:—

சிவஞானசித்தியார், சூத் - அ. பா - கரு - கசு.

“வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு [தத்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூற்
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந் தமாகும்.”

“சித்தாந்தத்தே சிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ் வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்னபிராந்தி.”

“மௌன உருவொள்” என்பதிற் * குடிலை ஆகிய மூலமநு † வினின்றாட் சிவசத்தியின் திருநோக்கத்தால் வெளிவந்தருளிய மூகத்தடையுள் என்பதும் அமைந்திடத்தலின், தொல்லோர்வழக்கின்படி தா

* பிரணவம். † மந்திரம்.

மும் மெய்ப்பொருளை அம்முதற்கடவுளாகவுங்கருதி அஞ்சலிசெய்தனர் என உரைத்தலுமமையும்.

யோகிகள் மூலமந்திரத்தை மௌனாக்கரமென்றும ஊமையெழுத்தென்றுங் கூறுவர். உதாரணம்:—

திருமந்திரம்.

"ஊமையெழுத்தொடு பேசுமெழுத்துறி
லாமையகத்தினி லஞ்சுமடக்கிடி
மோமயமுற்றது வுள்ளொளிபெற்றது
நாமயமற்றது நாமறியோமே."

முதற்கடவுளாகிய மூத்தபிள்ளையார் மூலாதாரத்தி னின்றும் வெளிவந்தருளிய வரலாற்றை விநாயகபுரா ணத்திற் கண்டுகொள்க.

அன்றியும், இந்நூலாசிரியர்மேலே "மௌனகுரு வணக்கம்" என்னுந் தொடர்நிலைக்கண் "மூலமாயா யில்வரு மௌனகுருவே" என்று தம்முடைய ஆசிரியனை வழிபடுகின்றாராகலின், அத்தன்மையவாகிய மாயகந்த சிவமே நம்மையாட்கொள்ளுமாற் திருவுளங்கொண்டு மேற்கூறிய திருமூலநாயனார்பாலிற் றூதுவாய்வகையெழு ந்தருளிவந்து தமக்குப் பக்குவகாலத் தெய்வத்த ன்மையையுட்கொண்டு, அவனைச் சுப்பிரமணியருதல் செய்தபடி என்பதுங் காண்க.

இன்னைக் குறிப்பாற் பொருளுணர்த்தலவது ஒன் றுறையணியாம்.

திருமூலநாயனார் ஸ்ரீகயிலாயத்திலே ஸ்ரீநந்திதேவரது அருள்பெற்ற அணிமாவாதி அட்டசித்திகளினும் வல்ல சிவயோகியார். அகத்திய முனிவர்பாலுள்ள நட்பினால் அவருடன் சிலநாள் வசிக்கவேண்டிக் கயிலையினின்றுங் காசி சிதம்பரமுதலிய அங்கங்குள்ள தலங்களைத் தரிசித்துவந்து, திருவாவடுதுறைக்கண் பரமசிவத்தைப்பணிந்து, அத்தலத்தின்கண் வசிக்க விரும்பிக் காவிரிக்கரைச்சார்பிலுள்ளவனத்தில்வரும் போது, அங்கு தம்மை மேய்த்திருந்து அந்நாளிற் காலஞ்செய்துவிட்ட மூலன் என்னும் பெயருள்ள ஓரிடையனைச்சூழ்ந்து கதறிக்கொண்டிருந்த பசுமந்தைகளைக்கண்டிரங்கி, அவற்றின் றுயர்நீக்கற்பொருட்டுத் தமதுயாக்கையை ஓரிடத்திற் சேமித்துவைத்து, அவனுடலிற்பிரவேசித்துப் பசுக்களையன்றுமுழுதும் மேய்த்து, பின்பு அதனதனிடங்களில் அவற்றைப் போக்கி, கணவனிறந்தது தெரியாதிடையர்மனைவியர் தம்மைத்தடுக்கவும் மறுத்துவிட்டு, தாம் சேமித்துவைத்தவிடத்திற்போய்ப் பார்க்க, தமதுடல் அங்கில்லாமைகண்டு அது பரமசிவத்தின் அருளென்றுணர்ந்து, தாம் பிரவேசித்த யாக்கையொடு சென்று, ஆவடுதுறைக்கண் பரமசிவத்தைத் தரிசித்து கோயிலின்மேற்பாலுள்ள அரசமரத்தினிழற்க ணமர்ந்து, ஆகமங்கள்கூறுகின்ற சரியையாதி நான்குபாதங்களையும் ஆண்டிற்கொரு பாசுரமாக மூவாயிரந் திருமந்தி

உ-வது பாடல்.

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
　முறவனந்தம்வினையினா
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
　தோவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
　றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனான்ஞான
　சித்தியா லுணர்ந்து
காரனந்தங்கோடி வருஷித்ததெனவன்பர்
　கண்ணும்விண்ணுங்கக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலைநங்
　கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
　பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
　பெரியபொருளைப்பணிகுவாம். (உ)

“ஊரா அனந்த (பேதம்)” என்பது:—ஊர் = ஜீவா அளவில்லையாகிய பேதங்கள்.

பல்லாயிரங்கோடி அண்டங்களிலும்சேய்மை, அணிமை கடிவிற் பல வேறுவகையாய் அளவில்லனவாய் உள்ள ஊர்களாம்.

"பெற்ற பேரோ அனந்த பேதம்" என்பது:—ஆவை கொண்டுள்ளபேர்களோ அளவில்லனவாகிய பேதங்கள்.

மேற்கூறிய வூர்கள் பலவுற்றுள்ளுந் தோன்றுந் தேகிகளையும் பேர்களோ அளவில்லன வாகிய பேதங்களெனினுமமையும்.

"சுற்றும் உறவோ அனந்த (பேதம்)" என்பது:—தேகிகளைச் சூழ்கின்ற உறவாதிகளோ அளவில்லன வாகிய பேதங்கள்.

உறவினராவோர் ஒருவரையொருவர்சூழ்ந்துநத்தியிருப்பதால் 'சுற்றமுறவு' எனப்பட்டனர்.

'சுற்றும் உறவு' என்றதால் அளவில்லனவாகிய பகையும் நொதுமலும் கூட்டியுரைத்துக் கொள்க. உறவாதிகளாவன: மனைவி, மக்கள், தாய், தந்தையர் முதலிய பலர்.

"வினையினால் உடலோ அனந்த (பேதம்)" என்பது:—வினைகள் காரணமாகத்தோற்றும் உடல்களோ அளவில்லனவாகிய பேதங்கள்.

'வினை' நல்வினை தீவினையென விருவகையாம் வினையின்றித் தேகமெடுப்பதில்லையாதலால் 'வினையினால் உடல்' என்றனர்.

உள்ளம் முதலியவற்றின் விகாரமே யிருவினைக்குங் காரணம். அவ்வினைகளே பிறப்பிறப்பிற்குக்காரணம்.

இவைமேல் நடுகீழ் ஆகிய மூவுலகத்திலும் தோற்றிக் கெடுவனவாம். இது எண்பத்து நான்கிலக்க யோனி பேதமென வரையறுக்கப்பட்டதேனும், ஒவ்வொரு பேதத்திலும் எண்ணிறந்த உடல்கள் தோன்றி அழி வனவாதலால் 'உடல் அனந்தம்' என்னப்பட்டது. இது எண்பத்துநான்கிலக்கயோனிபேதமென்பதற்கு உதாரணம்:—

சிவஞானசித்தியார்.

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயுசத் தோ, டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயிர த்தா, லுண்டுபல்யோனியெல்லா மொழித்துமானுட த்துதித்தல், கண்டிடிற்கடலைக்கையா னீந்தினன்காரி யங்காண்."

"செயும் வினைபோ அனந்த (பேதம்)" என்பது:—அவ்வுடல்களோடு கூடியவுயிர்கள் செயுஞ் செய்கைகளோ அளவில்லனவாகிய பேதங்கள்.

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், ஓம்பல், பயிறல், பயிற்றல், பொருந்தல், பொருத்தல், ஈட்டல் உழுதல், உழுவித்தல், காத்தல், அழித்தல், விரும்பல், வெறுத்தல், எதிர்த்தல், நன்குதல் முதலிய பலவேறுவகைப்படுவனவாம். மனையிலய பாருடனவும் செயவினைகளளவுபடாமையின் அனந்தமாயின.

“கருத்தோ அனந்த (பேதம்)” என்பது:—தேகின் பலவாறாகும் எண்ணங்களோ அளவில்லனவாகிய பேதங்கள்.

அவற்றை விண்டு விரிக்கிற்பெருகும் தேவாரத்திருவருட்பாக்களிற் பாட்டைக் கண்டுகொள்க.

“உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந் தெண்ணுவன.”

என்னும் ஔவையார் வாக்காலும்,

“ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.”

என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய வுரையாலுங் கண்டுகொள்க.

செயுஞ் செய்கைகள் தேகாதியவயவங்களாலாம், கருத்தெண்ணங்கள் மனாதியந்தக் கரணங்களாலாம்.

இவ்வினைகளுங் கருத்துகளும் யோக முயற்சியை யடையுங் கருத்தையு நோக்குங்கால் பயனில்லனவாய்க் கழியும்.

“பெற்றபேர் சீரோ அனந்தம் (பேதம்)” என்பது:—மேற்கூறிய ஊர்முதலியவற்றைத் தந்தம் வினைக்கீடாய்ப் பெற்றவர்களது செல்வமுதலியவையோ அளவில்லனவாகிய பேதங்களாம்.

செல்வ முதலியவற்றின் எதிராகிய வறுமைமுதலியபேதங்களுங் கொள்க.

“சொர்க்கமோ நரகமுமோ அனந்த பேதம்” என்பது:—(தேகிகள் அவ்வவ் வந்தத்திலடையும்) முத்திபதங்களும் நரகங்களும் தனித்தனி அளவில் லனவாகியபேதங்கள்.

சொர்க்கநரகங்கள் புண்ணியமிகுதியானும் பாவமி குதியானும் அடையப்பட்டவையாம். ஆகவே, ந வாகியகன்மபூமி அவ்விரண்டினையும் சமமாக அ விக்கும் இடமென்பதுகாண்க.

சொர்க்கங்களாவன:—இந்திரன் முதலிய இமை வர்பதங்களாம்.

நரகங்களாவன:—கனிட்ட பாதலங்கட்கும், அ ரகண்டம் சர்ப்பகண்டம் இராக்கதகண்டம் இவை ஒவ்வொன்றும் மும்மூன்றாயுள்ள எழுபாதலங்கட் கும் கீழே அடுக்காயுள்ள இரௌரவம், கும்பிபாகம் அபிசிகர்முதலிய அநேகபேதங்களாம்.

செய்கையுங் கருத்து மளவில்லனவாதலின் அவ றாலடையும் பலனாகிய சொர்க்கநரகமு மளவில்லன வாம்.

“நற்றெய்வமுமோ அனந்த (பேதம்)” என் பது:—(அவரவர்களும்பூசித்துப்போற்றி அங்கங்கு வழிபாடுசெய்யும்) நன்மையுள்ளதெய்வங்களோ அ வில்லனவாகிய பேதங்கள்.

தம்மை வழிபடுகின்றோர்க்கு இயன்ற வாற்றாற்பேற் றையளிக்கின்ற உண்மை நோக்கி 'நற்றெய்வம்' என் றார்.

பரமார்த்தமாய தெய்வம் ஒன்றேயாயினும் தேகி கள்பல்வேறுவகை யாகியும், அவர்கள் மனோவாக்குக் காயங்களால் அர்ச்சிக்குங்கர்மம் அளவிலாப் பேதங் களையுடையனவாகியு மிருக்கையால், அவ்வவற்றிற் கேற்பச் சடங்குகளைப் புஷ்டிபித்தப்பகவான் திரு விளையாடலாக அனந்தகருமகாண்டங்களை நியமித்து அனந்தவுருவங்களைக் கொண்டிருத்தலால் 'தெய்வமு மனந்தம்' என்றார்.

"நிகழ்கின்ற சமயமுமோ அனந்த (பேதம்)" என்பது:—(முடிவுபெறாமல் அங்கங்கும்) விளங்கா நின்றசமயங்களுமோ அளவில்லனவாகிய பேதங்க ளாம்.

அவ்வச் சமயங்களும் வாதிக்கப்பட்டு ஒழிவுப டாமல்அனந்தமான அளவைகளைக்கொண்டு நிற்கின் றன: ஆதலால், "நிகழ்கின்ற சமயமும்" என்றார். உதாரணம்:—

அவிரோத உந்தியார்.

"ஒன்றேயொன்றெவ்வா மதங்களெனொன்றொன் றிறைற்
பொன்றாவதில்லையே யுந்தீபற
பொய்யென்பதெத்தனைதா முந்தீபற"

மூர்வர்த்திற் சம்பந்த ளுறுமையுடி வீற்றி...
உதாரணம்:—
திருமந்திரத் திருவருட்பா,

“ ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல விருமுச் சமயமு
நன்றிது தீதிது வென் றுரையாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே.”

என்பதனானும்,

“ முதலொன் றாகி மூவருடன் வாகும்
திகழுறுகொம்பு செவிதுதிக்கைவாய்
மதியுடன் கண் வகைவகை யார்த்திடு
மதுகூறு மொக்கு மாறுசமயமே.”

என்பதனானுமறிக. இவை அகச்சமயமெனக்கொள...
பிற்காலத்தில் இச்சமயங்களினின்றும் பல்வேறாய...
யைப்புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள் புறப்பு...
ச்சமயங்கள் முதலிய வுற்பத்தியாகிய பொய்ந்நெறி...
னின் றமையான சமயங்க ளுண்டாகியிருத்தலான் சம...
முமனந்தம்' என்றார்.
தெய்வ பேதமும் சமய பேதமும் இத்தின முன்...
றுரைக்கப்பட்டன.
“ அதனால் ” என்பது:—(இங்ஙனம் மேற்போந்...
வை முதலியவைகளின் ஒவ்வொன்றின் பேதங்க...
எண்ணில் அடங்காதனவா யிருக்கும்) சொன்ன...
யினாலே,

“ஞான சித்தத்தியால் உணர்ந்து ” என்பது:—
[illegible]

[illegible]

[illegible] என்றது,

[illegible] அருள் [illegible] உணர்த்த உணரு [illegible]
[illegible]
[illegible] கூறப்பட்டது.
[illegible]
[illegible] இவ்வாறு [illegible]
[illegible]:—

(அபிராத [illegible].)

“ [illegible]
[illegible]
[illegible] ரன் றுந்திபற. ”

(சிவஞானசித்தியார், சூத்-அ: பா-உஅ.)

“ சூரியகாந்த தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனு மாசானவந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்
தூரியனுஞ் சிவந்தோன்றுந் தானுந்தோன்றுந்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்றும்
சேரியனைப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கும்
நின்றநிலை யெல்லாமு நிகழ்ந்து தோன்றும். ”

“கார் அனந்தம் கோடி வருடித்தது என” என்பது:—அளவில்லன வாகிய மேகசாலங்கள் ஒருங்கு சேர்ந்து ஏககாலத்தில் இடையறாமற் பொழிந்தலை போலு மென்னும்படி.

“ அன்பர் கண்ணும் விண்ணும் தேக்க” என்பது:—அன்பர்கள் கண்களும் அவை நாடும் ஞானாகாயமுந் தேங்குமாறு,

“ கருதரிய ஆனந்த மழை பொழியும் முகிலே” என்பது:—நினைத்தற் கியையாத ஆனந்தப்பெரு மழையைவிடாது பொழியாநின்ற நிலைமைத்தாய முகிலே,

“அன்பர் கண்ணும் விண்ணுந் தேக்கப்” பொழியு மானந்தமழையை யேனையோர் மனத்தினு லெண்ணமதித்தலு மரிதாகலான் “கருதரிய” என்றார்.

சர்வத்நம் முதலிய எழுமேகங்களும் மணிமுதலி யவற்றி ஆனந்த மழையைப் பொழியமாட்டாவாக லானும், இதுஅவைபோலாது கருணைமழையைப் பொழிவதாகலானும், இம்மழை பொழியக்கண்ட அன்பர்க்கு ஒரு நினைவுமுண்டாய்ச் சலியாதாகலா னும், கருதரிய ஆனந்தம்" என்றார்.

இவ்வாறு வருவது அற்புத உருவக அணியாம்.

கைம்மாறு எதிர் பாராது நீரைச்சொரிந்து உலகு யிரைக்காக்கும் மேகம்போல அருண்மழையைப்பொ ழிந்து ஆன்மகோடிகளையீடேற்றலால் "முகிலே" என் றார்.

"நம் கடவுளை" என்பது:—நமது கடவுளை,

"கடவுள்" என்பது எல்லாவற்றையுங்கடந்துள்ள தாகலாற் காரணக்குறியாயிற்று.

எல்லாவற்றையும் கடந்துள்ளதாவது பூதமுதலிய இருபத்துநான்கு தத்துவங்களும் பிரகிருதியிலொ டுங்க, புருடதத்துவ முதலியன மாயையிலொடுங்க, சுத்தவித்தை முதலியன விந்துவிலொடுங்க, சத்தி சிவங்களின் கூறாகிய அபரவிந்து அபரநாதங்கள் சுத் தமாயையிலொடுங்க, இவையெல்லாங்கடந்து நின் றது சுத்தசிவம் ஆதலால் கடவுள் என்னப்பட்டது. உதாரணம்:—

(சிவஞான சித்தியார் சூத்திரம்-௨ பா-௭௨.)

"மொய்தரு பூத மாதி மோகினி யாதி மாயை
மெய்தரு சமய மெல்லாம் புகுந்தின் றிடும்பு மன்று
மெய்தரு சைவ மாதி யிருமூன் றாம் வித்தை யாதி
மெய்யாகத் தையங்களையுமென் றமின்றெம்மிறைக்கே"

நேயத்தழுந்தின ஜீவன் முத்தரானதம்மைப்போல வச்சிவசந்நிதி யறுசந்தான முடையோரையுமுள்ளிட்டுக்கொண்டு "நமது கடவுள்" என்று சுதந்தரித்துக் கூறினர். அங்ஙனங்கூறின் சங்கற்பவிகற்பங்கள் தோன்றா வென்னும் போதம் சிறிதுமில்லாராகலால், உடைமையை இடைப்பொருளாக "நமது" எனவுபசரித்தனர். அன்றி மலபரிபாகத்தின்மேல் ஞானம் பிரகாசித்துச் சதாசாரியன் அருளால் நிட்டை கைகூடிச் சிவன்முத்தராய் விகற்பமின்றி ஒடுங்கியொன்னும் ஒப்பக்கண்டு, மெய்ப்பொருளின் வியாபகத்தில் வியாப்தமாகப்பொருந்தி அதனை நீங்காமலுடைந்தையாய் அதனையே கொண்டிருக்கை அவர்க்கியற்பாகலால், அவ்வாறு கூறலுங்கூடும் எனக்கோடலு மொன்று உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-அ. பா-௨௧)

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத் திநிபாத
மெய்தனில் ஞானக்கினால் தோர்குருவி னருளாற்
புக்கொழுட்டுச் சேர்நிட்டை புரிந்தொ ளொர்கள்
பூதலத்திற் புகழ்சிவன் முத்த ராகித்

தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டாத்
தமனியத்திற சமபுந்தி பண்ணிச்சங் கரனே
டொக்கவறைந் திவனவனா யவனிவனா யிடாதே
யடக்கையாய்ச் சிவன்றோற்றமொன் றும்பேரனென்பர்

"துரிய வடிவை" என்பது:—துரியஞான சொரூபத்தை,

எல்லாவற்றையும் தன்னியல்பானேயறிந்து ஆன்மாக்களை அறிவிக்குமபடித் துரியஞானமாம், துரியம் மேலான ஞானமாம், நின்மலாவத்தையில் தற்சொரூப தரிசனத்தோன்றுவது துரியம், அவ்வறிவே வடிவமா யிருத்தலாம் இவ்வாறு தோற்றுவித்தருளிய காதலின் "துரியவடிவு" என்றார். உதாரணம்:—

(திருமந்திரத் திருவருட்பா.)

"அறிவறி வென்ற வறிவு நனவா
மறிவறி யாமை யடையக் கனவா
மறிவறி வவ்வறி யாமை சுழுத்தி
யறிவறி வாகு மான துரியமே"

என்பதனாலும்,

"சிவமா யவமான மும்மலந் தீரப்
பவமான மும்பாசைப் பற்றறப் பற்றத்
தவமான சந்திய ஞானர் தத்தந்
நவமார் துரியத் சொரூபமு மாமே."

என்பதனாலும்.

“பரம நாதவன் பரமொன்று மாகித்
திரமுற வெண்ணறுரு சேர்ந்தொழிவற்று
நிரவு சொரூபத்து நின்றுந் தொகுப
பரிய துரியத் தணைந்தா நின்றனனே”

என்பதனுலுங்காண்க.

“பேர் அனந்தப்பேசி மறை அனந்தஞ்சொலும்” என்பது:—அளவில்லனவாகிய அபிதானங்களை யெடுத்து அளவில்லவாகிய வேதாகமங்கள் ஏத்தாநின்ற.

பேரனந்தமாவன:—நிர்க்குணம், நிராமயம், நிரஞ்சனம், நிராலம்பம், நிர்விடயம், நிட்களம், அசங்கம், நிர்வசனம், நிர்த்தொந்தம், நித்தம், முத்தம், தற்பரம், விசுவாதீதம், பரிபூரணம், சயம்பு, சிவம், பதி, பரம், அபரம், பராபரம், அந்நியம், அநந்நியம், தற்பதம், பரபதம், அநுபூதி, பரமாகாயம், அற்புதம், நிரதிசயம், தேசோமயம், சின்மயம், சிற்பரம், ஆதி, அநாதி, ஏகம், அநேகம், அகண்டம், பரஞ்சோதி, மாயாதீதம், சுகாதீதம், வன்னிபிரதா, சத்தியன், அரு, உரு, புருடன், மெய், சத்து, பரமான்மா, பரதத்துவன், பரப்பிரமம், யாகமுதல்வன், மும்பண்டலேசன் முதலியபலவும். பலவேறு சமயிகள் கூறுவனவும், அன்பர்கள் துதிப்பனவும் ஆம்.

மறையனந்தமாவன:—நான்கு வேதங்கள், அவற்றின் சாகைகள், இருபத்தெட்டு மூல ஆகமங்கள், இவற்றின் பிரிவுகள், உபாகமங்கள், இவற்றின் பகுதி

சிருதிகள் முதலியவையாம். தாரகம் காயத்திரி முத லியவை பகுதிகளும்; அங்கம், சீக்ஷை முதலியனவிரு திகளும் ஆம்.

"மறை அனந்தம்" என்பதற்கு உதாரணம்:—

"இன்னவை யிரண்டு மிவனருள் வலியா
லின்றநான் மறையைய நான்கும்
பின்னிவ னருளா லளவில வான
பிரணவ மாதிமந் திரமும்
அன்னவா றன தாரகத் தகார
மாதியக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நாலிச்
சுரவர னடுமுகத் துதித்த."

பேதிகள் பக்குவத்திற்கேற்ப கடவுளிலே பலவா கவேதங்கள் சொல்லியிருத்தலின் "மறையனந்தமா கச் சொலும்" எனப் பொருள்கொண்டு மொன்று உதாரணம்:—

(அஞ்ஞவதைப்பரணி.)

"பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டதொருபொருளினையாம் பணிதல் செய்வாம்"

(அவிரோதவுந்தியார்.)

"சுருதிகள் சொல்பல் சமயத் துறுவுமப்
பரசிவ பந்தமென் றுந்தீபற
பகர்காமம் வேறுவே றுந்தீபற."

மற்றும் வருவனவற்றுற் காண்க.

"பெரிய மௌனத்தின் வைப்பை" என்பது:— பெருமைத்தாய மௌனசொரூபத்தை,

பண்டை யோருகத்தின்கண், சனகாதி நான்கு பிரம விருடிகளும் பரமசிவத்தைப் பிரார்த்தித்து "எங்களறிவு அமைந்தடங்கும் வகைமையை அடியேங்கட்குணர்த்தியருளுதி" என விண்ணப்பஞ்செய்ய, அதனைத் திருவுள்ளத்தடைத்து, கல்லாலின் மூலத்கண் வீற்றிருந்து, வேதாந்தத் தெளிவாகிய ஆகமத்தியம்பும் திரிபதார்த்தவியல்புகளையு முபதேசித்தருளலும், அதனைக்கேட்டுணர்ந்த பின்னரும் "அறிவமைந்தடங்குதற்கு இன்றியமையாக் கருவியாகிய ஞானபோதகத்தையும் போதித்தருளல் வேண்டும்" என்ன, பரமகுரவன் புன்முறுவலரும்பி அதற்கு யாதும் எதிர்கூறானாகி, "அது வாயாற்புகல்வதன்று. இவ்வண்ணமிருக்கையே அதன் நிலையாகும்" என்று அவர்கட்கு உணர்த்துவானாகித் தனது திருமார்பின்கண் ஒரு கையைச் சேர்த்து ஒருகையில் ஞானமுத்திரையைக் காட்டி, யோகியர்போலவிருந்தபடி அவரும் அவ்வாறுணர்ந்து அறிவொடுக்கம் பெற்றாரென்ப. இங்ஙனமாகிய மோனத்தினிலையுந் தன்மையாகலானும், அதுவே பரமுத்தியாகிய வைப்பாகலானும், "பெரியமௌனத்தின் வைப்பு" என்றார்.

மௌனநிலையிலிருப்போர் அடையும்விசேடத்தை வெளியுமாம். உதாரணம்:—

(தாயுமான வள்ளலார்.)

"தானே சிவமான சத்தியநா றானந்த
மோனநிலை சொல்காழி முன்றுறேனே."

என்பதானும்,

"மாயைமையுங் கற்றுத்தற் போதமற்று
மவுனநிலை யுற்றோர்கள் பெற்ற பேறே."

என்பதானுமறிக.

"பேசரும் அனந்த பதம் (அனந்த) ஞானம் (அனந்த) ஆனந்தம் ஆம்" என்பது:—பேசற்கரிய அந்தமில்லாததான பதமும், அந்தமில்லாததான ஞானமும், அந்தமில்லாததான ஆனந்தமுமே தனது மெய்யாகின்ற,

முடிவில்லாதனவாகிய பதத்தையும், ஞானத்தையும், ஆனந்தத்தையும் மனதிற்கொள்ளவே வெகு அருமை அவற்றை வாக்கினால்வசனிக்கல் அதினுமருமையாதலால் "பேசரும்" என்றார்.

அனந்தபதமாவது:—முடிவில்லாநித்தியமுத்திபதம். அது கேவலசகலங்கள் நீங்கி, அருளைத் தரிசித்து, காண்பானுங்காட்சியுமா யறிஞாயங்க ளறசதந்தாந் தவமும்விட்டு, தற்போதமுமடங்கி, ஆனந்தாநுபவம் பெற்று, ஒன்றுந்தானுகாமல் ஒன்றாயிருந்தசிவத்தில்

இரண்டறக்கலந்து, போதவாசனையுமொழிந்த அ தீதமாகியநிலையாம், ஆகலின் "பேசருமனந்தபதம்" என்றார். இந்நிலையே சிவயோக சிவபோகங்களாம். அனந்தஞானமாவது:—முற்றுமுணர்தலாம்.

அனந்த ஆனந்தமாவது: வரம்பிலின்ப முடைமை யாகியபரமசுகமாம். அவைமுறையே வேதாகமங்களை யருளிச்செய்தமையையும், திவ்யாகமத்தின் வழியே செல்வார்க்கு வினைகளையொழித்து அநுக்கிரகிக்கின் றமையும் ஆமெனக் காண்க.

இனம்பற்றித் தன்வயத்தனாதல்முதலிய ஏனைய ஆறுகுணங்களையும் கூட்டியுரைக்க.

அவையாவன:—

"தன்வ யத்தவன் றூய வுடம்பினன்
றூனி யற்கை யுணர்வின னாகுதல்
பன்னு முற்று முணர்த லியல்பினன்
பாச நீங்குதல் பேரரு ளாகுதல்
மன்னு மீறில வாற்ற லுடைமையும்
வரம்பி லின்பமு மாகிய வெண்குணம்."

என்பனவாம்.

"பெரிய பொருளைப் பணிகுவாம்" என்பது:—பரமகர்த்தாவை வணங்குவாம். எ-று.

இப்பொருளினும் உயர்வும் ஒப்புமுள்ளது பிறிதொன்றின்மையாக, இஃதே எல்லாவற்றிற்கும் பெரியதாகலான், "பெரியபொருள்" என்றார். பராதி

பண்டப்பரப்பு அனைத்தும், அவற்றுட் சராசரமனைத்தும் விரிக்கின் பசுபாசங்களுளடங்கும். இவ்விரண்டும் பதியிலடங்கும். அடங்கவும் தான் சுதந்தரனாய் அவைகட்கெல்லா மாதாரமாகி அவற்றொடு தாக்கற்று நிற்பதாகலான் எல்லாவற்றிற்கும் பெரியபொருளாம். உதாரணம்:—

(அவிரோதவுந்தியார்.)

“ பல்லோர் துணிவும் பராதிமூன் றுந்தேர்த
வல்லாரல்லே நில்லென் றுமுந்தீபற
வவ்வவர் கொள்கை வேறுந்தீபற.”

ஊ: முதற்சமயம் ஈறாயுள்ள விடயங்கள் தனித்தனி அனந்தம் என்னும் பேதங்களாயுள்ளன. அவற்றின் தோற்றக்கேடுகளைச் “சிற்சத்தியா னுணர்ந்து” “அனந்தப் பழமொழியுமாகினும்” “நம்கடவுளும்” “துரிய வடிவும்” “பெரிய மௌனவைப்பும்” “அனந்தபதமும்” அனந்தஞானமும் அனந்தானந்தமும் ஆகிய “பெரிய பொருளைப் பணிகுவாம்” என முடிக்க.

இது சிவத்தைப் பணிந்தது.

‘கருத்தோ அனந்தம்’ என்பதிலுள்ள ‘ஓகாரத்தையும்’ ‘நற்றெய்வமும் அனந்தபேதம்’ என்பதிலுள்ள ‘பேதம்’ என்னும் சொல்லையும் எல்லாவற்றோடுங் கூட்டுக.

‘தெய்வமும்’ ‘சமயமும்’ என்பவற்றுள்ள உம்மைகள் சிறப்பும்மை, மற்றவை எண்ணும்மைகள்.

(அவிரோத வுந்தியார்.)

" பாச்சுநோய்க் கன்றே மருந்திரு வடியின்ப
நோய்க்குமோர் பக்குவத் துந்தீபற
தேசிக னுச்சிவ முந்தீபற.

(வள்ளலார்.)

"குருவுருவங் கொண்டிக் குவலயத்தாட் கொண்டப்
பருவரன் நீக்கும் பரன்."

(திருவாசகம்.)

" அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே."

எனவரும். மற்றும் வருவனவற்றாற் காண்க.
இவ்வாறு அத்துவிதப்படுமென்றே வீடு. உதாரணம்:—

(திருவாய்மொழி.)

" நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந் திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா
ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே யப்போ தேவீ
டதுவே வீடு வீடாமே.

என்பதனானும்,

(சிவானந்தமாலை)

"சித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் மெய்மொழிக்குந்
தத்துவமற் றேவலுமஞ் சார்வகற்றிச்—சுத்தத்
தனியனித் தானும்போய்த் தற்பரமாய் விட்டாற்
செனியானிருசத்தியம்."

எனபதனுலும்;

(அவிரோதவுந்தியார்.)

"அந்தப் பயத்தோ டிரண்டற் றயிக்கம்
வந்தருள் விட்டையே யுந்தீபற
அத்துவித வீடென் றுந்தீபற."

என்பதனு லுமுணர்க.

'விடு' என்பதற்குப் பொருள்—விடுதலை. விடுதலை யாவது பந்தக்கமாதலின பந்தமொன்று உண்டெ னைபதூஉம், அது உண்டாகவே பந்தத்தினைகெட்டுப் பட்டுருத்த அதினின்றும் விடப்படுவான் உண்டென் பதூஉம், பந்தச்சடமாகையினாலும், பந்தமுடையோன் சுதந்தரனன்மையினாலும், உயிர்களுக்குப்பந்தத்தை நீக்கி முத்திகொடுப்பான் ஒரு சுதந்தரகர்த்தா உண் டென்பதூஉம் சர்வசம்மதமாம். உதாரணம்:—

(சிதம்பரசுவாமிகள்.)

"விடென் றுறைதரு சொற்குப் பொருளோடுவிடு தலாதலினால், விர்குண் டோனுங் கட்டமாக விள க்குத் திடமாகப், பிறிது கட்டுந் தானும் விட்டுப் பெ றாத் திருச்சடமாம், பிணிபட் டோனசு தந்தர னுமிப்

[illegible]

திசயங்கள்:—

(சிவநெறிப்பிரகாசம்.)

“[illegible]”

அன்றியும்,

“[illegible]”

முதலியவாம்

[illegible] வுணர்க,

“[illegible]” என்பது—[illegible]

பிரபஞ்ச உற்பத்திக்கு உபாதான காரணங்கள் மூன் றாகிய சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என மூன்றும் அவற்றுட் சுத்தமாயையிலே [illegible] பராசத்தி அதனை அதிட்டித்து [illegible] அதிற்றோ ன்றிய [illegible] திருமேனியாய் [illegible] புத்திமுத்திகளைக் கொடுத்தலால், "மோசப்பிரதாய" என்னும் [illegible] திருமேனியாக [illegible] [illegible] அத்திருமேனியுள் [illegible] போ தரும். உதாரணம்:—

(சிவஞானசித்தியார். சூ - ௧ பா - ருக)

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]."

என்பதனாலும்,

"[illegible]
[illegible]"

என்பதனாலும் [illegible].

[illegible] தெளிவாயே [illegible] மொழிதுமாம்.

உதாரணம்:—

(பட்டினத்தார் சுவாமிகள்.)

"[illegible]
[illegible]
[illegible]."

என்பதனாலும்,

(திருவுந்தியார்.)

"சொல்லும் பொருளுமே தொல்லை தனையுமாய்
அல்லவு மானவனென் றுந்தீபற
யம்பிகை பாகனென் றுந்தீபற."

என்பதனானு முணர்க.

சிலபிரதிகளிற் "சொற்பிரகாசத் தனியை (சுயமாய்ப் பிரகாசிக்கும் ஒன்றை)" யென்றிருக்கின்றன. இது பின்வருவனவற்றாற் கூறியது கூறலாயினும் குறைத் துக்குடன்படுமாகலாற் பிரயோகமாம்.

"அருமறைகண் முரசறைய" என்பது:—அருமையாகிய வேதங்கள் பலவுமற்புமாறு முழங்காநிற்ப.

அருட்சத்தியே உயிர்க்கு உணர்வாகிப் பேரின்பத்தையடைவிக்கின்றது என வேதாகமங்கள் ஐயமற வுணர்த்துகின்றன என்பதற்கு "மறைகண் முரசறைய" என்றார்.

வேதத்துட்பொருள் யாவருக்கு மெளிதல்லாதலால் "அருமறை" என்றார். சகல இரகசியங்கட்கும் உறைவிடம் வேதங்களாதலினாலும், அவற்றின்பொருள் புதைபொருளாயிருத்தலினாலும் வேதங்கள் "மறை" எனும்பெயர்பெற்றன. முரசறைதல்—வெளிப்படுத்தல்.

"அறிவினுக்கு அறிவாகி ஆனந்தமயமான ஆதியை" என்பது:—சிற்றறிவாகியவுயிர்க்குள் அறிவாகிப் பேரின்பப் பெருக்கே தனது மயமான ஆதிசத்தியை.

உயிரானது உடலுக்கும் அந்தக்கரணங்கட்கும் அன்னியமானதென்றாய், பாசவுணர்வொழிந்தது ம்

தவிடம் பசுவுணர்வென்றும், பசுவுணர்வொழிந்து நின் றவிடம் பதியுணர்வென்றும், தனது ஞானக்கிரியைகள் மலமறைக்கப்பட்டு அவத்தைப்படுமென்றும், தன் னைக் கர்த்தர் சத்திதானேயான அருள் காரணமாகக் கருவிமுதலியவற்றாலுணர்த்துமென்றும், பக்குவச் செயல்கட்கு வியாபகமான அறிவையுதவி, முத்தி யில் ஆனந்தம் பெறுமென்று முணர்த்துதலை "அறிவிலுக்கறிவாகி ஆனந்தமயமான ஆதி" என்ற னர். உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத் - ரு. பா - அ.)

"தெரித்துக்கொண் டரோவென் றாகச்
சென்றுறைந்து புலனும் பற்றி
புரிந்திடு முணர்வி னோடு
போகமுங் கொடுத்தி யோனி
திரித்திடு மதுவுஞ் செய்து
செறிதிசண் டிரிகட் டெல்லாம்
விரித்திடு மறிவுங் காட்டி
வீட்டையு மளிப்பன் மேலோன்."

எனவும்,

(கந்தபுராணம்.)

"அருளினீர்மையா லைந்தொழில்புரிபவன்" எனவும்

(சௌந்தரியலகரி.)

"சிவமெனும்பொருளு மாதி சத்தியொடு
சேரி னைந்தொழிலும் வல்லதாம்."

னைவுங் கூறியவாற்றால், பஞ்ச கிருத்தியத்தையுஞ் ஆதிசத்தியின் சேர்க்கையால் நடாத்துவனென்பதூஉ மென் றா. இவ்வாறு கூறுதலாற் சத்தியுஞ் சிவமும் ஒன்று தல் பற்றி என்க. உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சு-உ பா-எஎ.)

"சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ்
சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் றெரியு மன்றே."

"அறிவினுக்கறிவாகி" என்பதற்குதாரணம்:—

(வள்ளலார்.)

"அறிவுக் கறிவா யறிவிப்பா னில்லேற்
கறிவுருவு கொண்டறுகு வான்."

(கந்தபுராணம்.)

"ஒருமையாலுலகுவேருணர்வினுக்குணர்வதாய்
பெருமையாலெனைத்துமாய்ப்பிரிவருப்பெற்றியான்"

என்பனவற்றாற் காண்க.

ஈச்சுரனுக்குரியகல்யாணகுணங்களில் 'பேரின்பம்' (அளவில்லாப் பேரின்பம்) ஒன்றுதலால் "ஆனந்தமயம்" என்றார். உதாரணம்:—

(வள்ளலார்.)

"இன்ப மயமாகி விளங்கும் விரோதமற்ற
சுகப்பெறும் பேருந் தரும்"

(திருமந்திரம்.)

"இன்பமு மின்பக் கலவியு மாய்நிற்கும்"

என்பனவற்றாற் காண்க.

"ஆதியை" என்பவற்றிற்கும் மூலகாரணமாகிய முதற்பொருளை (பரமசிவத்தை) யெனினுமாம்.

உதாரணம்:—

(திருமூலர்.)

"அருளும் வகைசெய் பரதிப் பிரானுமே"

என்பதனாலும்,

"பரமவன் பல்லுயிர்க் காதியு மாமே"

என்பதனாலு மறிக.

"அநாதி ஏகத்துவ சொரூபத்தை" என்பது:— ஆதியந்தமில்லாததாய சிவமேதானாகியும், தானே சிவமாகியும் ஒன்றாயுள்ள உண்மைவடிவம்.

சத்தி சிவத்தின் வேற்றுமையின்றி ஏகத்துவமென்பதாம் சத்தியுஞ் சிவமும் இரண்டெனின், சிக்கலுற்று பிறப்பித்தனப் பொருள்பட்டு, சருமவியாபகம் பின்னப்படியாமைவல், ஆதியனும் கிரணமும்போல், தன்னிலபேதித்ததும் புறப்போகின் ஞானாதிகைவதுமாகிய இருதன்மையையுடைய சோதிவாய் சைதன்யமென்னும் புறப்பொருளை நோக்கு சிவமிற்சத்தியெனவும்,

அதனை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குமிடத்தில் சிவமெனவும், வேதாகமங்களுணர்ந்தோர்முன் "அநாதிபேதகம்" என்றும், அனலின் தன்மைபோன்று சுடுதல் அடுதல்முதலிய தொழிலால் வேறுவகையா மாறுபோல, சிவசக்தி ஒன்றே காரியவேறுபாட்டால் சிற்சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்றைவகையாயும், நிவிர்த்திமுதலிய ஐவகையாயும், இன்னும்பலவேறுவகையாயும்நிற்குமாதலால், "தத்துவசொரூபம்" என்றுங்கூறினர் அவ்வச்சத்திகளோடுபுணர்ந்த சிவமும் அச்சத்திகட்கு இடமானவிந்துவும் பலவேறுவகையான விர்த்திப்பட்டு அவ்வப்பெயர் பெறுமென்றுணர்க. உதாரணம்:—

(சிவஞானசித்தியார்.)

"மருவிடு மறைமுதற் சிந்தாறு பன்னிரண்டே."

(கந்தபுராணம்.)

"இத்திறந்தா லவசபதா யிறுமுத லைவெயினை
மத்தனாறு திருவடிக்கி முடங்கிய பரிசினோன்."

எனவும்,

"அன்னை முமேகன்றுறாமனைப் பருக்குணர்த் திறத்தாம்"

(பிரமகீதை.)

"ஒருத்தனே பனிரசி யாகிய
வொருவனாய வெருமிர்தில் றான்."

எனவும்,

(தத்துவராயர்)

"தலைவர்க தத்துவனு மெய்மையே
யின்று சார்ந்தனரே."

'போதமே
தத்துவரூ பம்மிதனைச் சங்கையற்ற மானவகை
புத்தியிடை நன்றாய்ப் புதை.'

எனவும் வருவனவற்றாற் காண்க.

.மதசம்மதம்பெறுச் சாலம்பாகிதமான சாகலதம் புட்கலம் நிராலம்பம் ஆலம்பம் சாந்தபதம் வியோமமிலையை" என்பது:—பற்பலசமயங்களினும் பலவேறு பொருண்மைபடக் கூறுங்கொள்கைகளில் அவ்வவ்வாற்றானின்றும், அவைக்கதீதமுமாகின்ற சாலம்பாகிதமும் சாகலதமும் புட்கலமும் நிராலம்பமும் ஆலம்பமுமான சாந்தபதமென்னும் பரவெளியை,

"மதசம்மதம்பெறு" என்பதற்குதாரணம்:—

(பட்டினத்துச்சுவாமிகள்.)

"அன்றென்று மாமென்று மாறு சமயங்க
ளொன்றோடொன் றெவ்வா றுரைத்தாலும்."

என்றும்,

(பிரமகீதை.)

"வேதாகமபுராணமிருதிகள் வேறுமார்க்க
சோதனையாமவைகட்கமொன்றோ டொன்றொவ்வாதாகும்"

என்றும் வருவனவற்றாற் காண்க.

சாலம்பம்-ஆதாரத்தோடுகூடியது. சாலம்பமாகிய தம் தாமென்றும் பிடிப்பில்லாதது எல்லாவற்றிற்கும் தானே ஆதாரமாயிருத்தலன்றி, தனக்குத் தன்னினும் வேறு ஆதாரமின்றி யுள்ளது. உதாரணம் —

(சிவஞானசித்தியார்)

"நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னாகியே"
என்பதனானும்.

"ஆதரவின்றிச் சற்றுமனைத்திற்கா தார மானாய்"
என்பதனானுங் கண்டுகொள்க.

சாசுவதம்-முதலு முடிவு மில்லாதது.

(பிரமகீதை.)

"எப்பொருள் களுக்குந் தோற்றமு நிலையு
மிறுதியு மிதனைக் கேயாகி
யொப்பிட வொன்று மின்றியே யென்று
முள்ளதா யுரையுணர் விறந்த."

என்பதாலும்,

(சிவஞானசித்தியார்.)

"அந்தமொ டாதி யில்லா னளப்பில னாத னேலே"
என்பதனுலு மறிக.

புட்கலம்-நிறைவு. உதாரணம்:—

(கந்தபுராணம்.)

"ஒருவர் பாலினும் பிறந்திடா னருவுரு வருவா
யிருமைய யாயுறை பூரணனி யாவர்க்கு மீசன்."

(வள்ளலார்.)

"போக்கொடு வரவுமில்லாப்
பூரணப் பொருளாந் தெய்வம்."

—ற்றாம் வருவனவற்றாற் காண்க.

நிறைவைப்பம் - தன்னினும் பிறிதொன் றியற்கையா னே விளைவது. உதாரணம்:—

(பிரமகீதை.)

"ஒழிந்தவொரு பொருளின்றியுள்ள தெல்லாமதனின்முன்
அத்தப்பொருள் மேலும் வாக்காவ பொருடாளுமன்..."

(கந்தபுராணம்.)

"மூல காரண மில்லதோர் பராபர முதல்வன்."

என்பனவற்றாற் காண்க.

ஆலம்பம் எல்லாவற்றிற்கும் தானே ஆதாரமாயிருப்பது. உதாரணம்:—

(திருவாசகம்.)

"ஒன்றாநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே."

(தேவாரம்.)

"தக்காரிலர் தானன் றிமேலொன் றில்லாத்தத்துவனை"

என்பனவற்றாற் காண்க.

சாக்ஷி பதவியோகிலே - அகங்காராதிக ளில்லாத தானமாகிய ஆதாரம். உதாரணம்:—

(அருணகிரிநாதர்.)

"இராப்பக லற்ற விடத்தே யிருக்கை
யெளிதல்லவே."

(தலமான்மியம்.)

"மங்கல்செய் மலம்புலன்கள் மாள வோட்டி
மன்னுயிரை யாட்கொள்ளும் விருது கட்டித்
தங்கமமை தனித்திடமே தந்து வெங்கட்
டுரைமகன்றன் றிருவடியைத் துணைக்கொள்வாமே"

(ஞானவாசிட்டம்.)

"திடவிசும்பன் றாயிருந்தும் விசும்பான
நிலையதுவாம்."

என்பனவற்றா லறிக.

யோகமாவது அகத்தொழின்மாத்திரையானே ஈச்சுரன் அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. அது இந்திரியங்களையொடுக்கி மனத்தை விடயங்களின் வழிசெல்லவொட்டாமல் திருப்பி, ஒரு குறிப்பில்நிறுத்தி, உச்சுவாசம் நிச்சுவாசமென்னும் இரேசக பூரகவாயுவைத் தடுத்து, நடுநாடியாகிய சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி, மூலாதார முதலிய ஆறாதாரங்களின் அந்தர்மாதிருகாக்கிரமத்தை யறிந்து, அவ்வவ்வாதாரங்களின் தேவதைகளை யுபாசித்து, அவர்களனுக்கிரகத்தால் அவ்வாதாரங்களிலே தோமுகமான பதுமங்களைப்பேதித்து அவற்றின் மேல் பிரமரந்திரவளவும் அசபையுடன் சென்றணைந்து, அங்கு அதோமுகமாகவிருக்கும் சகஸ்திரதள தாமரைமுகையை ஈசுரனருளால் அங்குதிக்குஞ்சிவார்க்கனிலே மலரச்செய்து, அந்தத் தாமரைப்புட்ப

தின் கேசாக்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தைத் தஞ்சனஞ்செய் நவிறுமேல் மூலாக்கினியை அக்கினி பிஜாட்சர உச்சாரணைத்திறமேல் எழுப்பி, நாடிசக்கரக்கிரமப்பேதித்து, அவ்வக்கினியினாலே சந்திரமண்டலத்தையிளகப்பண்ணி அந்தவமிர்தத்தைச் சர்வநாடிவழியாயொழுகத்து, உடல்முற்றும் நிறையச்செய்து, அதிலுண்டாகும் சுகோதயத்தில் அந்தமயமான ஞானமிர்தாவத்தையையடைந்துநின்று, சோமசூரியாக்கினிப் பிரகாசநிகளாகிய பிரத்தியேகப் பிரகாசங்களெல்லாம் சூரியோதயத்தில் நட்சத்திராதிப் பிரகாசங்களடங்குவதுபோலத் தன்னிடத்தடங்கப் பரவொளிநடுவிற் சர்வதோமுகமாய்ப் பெருஞ்சோதியான சிவத்தைச் சத்தியோடு நேர்நோக்கிச் சுயம் பிரகாசமாயதனுளழுந்தி யிருப்பதனாலும், சாந்தியோகத்திற்குக் காரணமாதலாலும், யோகியர் புக்கழுந்துவதுபரவெளிச் சோதியுள்ளாதலாலும் 'சாந்தபதவியோமமிலே'' என்னப்பட்டது. உதாரணம்:—

“ காலை சேர்பெற வோட்டியே கனலினை மூட்டிப்
பால மார்பமன் வீட்டியே தன்னுறு படிவத்
தேனு மன்பினின் மஞ்சன மாட்டியே யிறைக்குச்
சீல மாமலர் சூட்டியுட் பூசனை செய்தான் ”

“ காலமூ வாயிரங் கழிந்த பின்முறை
மாலுறு மருத்தெனு மாலைத் தூண்டியே

நாலியல் கணமின்ன முகிற்கு முட்டிறு
மேலுற மயிர்த்தின மிசைதன் மேவினும்."

இடத்தின்பொருளை விடமாக வுரைத்தனர்.

"நித்தம்நின்மலசித்தம் விட்டபந்தப் பொருளை" என்பது:—நித்தக்வரும் இயற்கையிலே அசுத்திமை யில்லாததும் பிரபஞ்சவாசனைத் தொடர்ந்துள்ள பாச மப்பொருளை,

விடயங்களை ஒவ்வொன்றாய் விசாரித்து விய அவை துன்பத் தன்மையனவென்று அநுபவத்தாற் கண்டு ஒழிவுபெறலும், ஆன்மாத் தனதுநிலைமையையுமுணரப்பெறும். பெருநித்தமாயுள்ள சிதம்பரநிலையை யுணரக்கிடைத்தற்குத் திருவருள் முன்னிற்பதாகலின் இறைமெய்ப்பொருளின் குணமென்றும், சாதனைமுறையைப்பற்றி நித்தத்துவமும் சிவம் மலத்தால் மறைக்கப்படாத இயல்புடைமைத்தாகலால் அதன் குணமாகிய சத்தியும் அவ்வியல்பாகலாலின் மலரகிதமும்; ஆன்மாக்கட்குச் சுகதுக்கங்களைப் பக்குவத்தில் இல்லையாகப் பண்ணிப் புலங்கொளுத்த வீட்டின்கண் வைப்பதற்குச் சத்திகருவியாய் முன்னிற்றலால் "நித்திய பந்தப்பொருளுமாம்" என்பதற்கு உதாரணம்:—

(கந்தபுராணம்.)

"நித்தனு முயிர்க்கு நீங்கா நிருத்தனு மனைனா
யென்னும்."

(வள்ளலார்.)

"பராபரமாய் சித்தாய்ப் பரிபூரணமாய்."

என்பதனும்.

(திருவாசகர் திருவருட்பா.)

"நித்த நிர்மல நிர்விகற்ப வரிய நிர்மல
நின்னருள் வெள்ளம்"

(கந்தபுராணம்.)

"நிர்க்குணத் தனை நிமல னன்னவன்"

என்பதனும்,

(வள்ளலார்.)

"உலக மேலையுங் கடந்தவ னடிகளே யுவப்பாம்"
"உலகப் பற்றை பொறித்த நிபுணன்"

என்பதனும் மறிக.

"நிர்விடய சுத்தமான நிர்விகாரத்தை" என்பது:— விடயப் பற்றுக்கொன்றுமில்லாததாய்ச் சுத்தமாக யாதொன்றின் வயமுந்தானெய்தாமல் யாவுந்தன் வயத்தனவா யுள்ளதை,

பஞ்சவடிவாகிய கேவலாவத்தையும், விகற்பவடிவாகிய சகலாவத்தையுமே விடயமாகும். அவையில்லாததாகிய நிர்விடயம் சுத்தாவத்தையாம். இதில் நிலைத்த திருவருளை யடைவர்க்கு தாரகமாதலால் நிர்விடயமும், சுத்தமும் நிர்விகாரமுமாம் என்பது காண்க. நிர்விடயம்-அபரிச்சின்னம். சுத்தம் தான் பூரணனாக

விருந்து பிறிதொன்றானு மறியொண்ணாமை. நிர்வி
காரம்-விகாரங்களையடையாதது உதாரணம்:—

"விடயப் பேதை விலக்கியவிபுதன்"

(தேவிகாலோத்தரம்.)

"பொருவிலா நித்தசுத்தப் பொருளினை
யடைவரன்றே."

(கந்தபுராணம்)

"சுத்தனா முணர்நற் றன்னார் சோதியு
மியாண்டு மேவும்."

(வள்ளலார்.)

"அறிவுக் கறிவா யவிகாரி யாகி
நிறைதல் பதிநிச் சயம்."

"அவிகாரி யீசனருளைப் பெற்று
லவிகாரி யாவையன்றி யச்சோ."

என்பனவற்றா லறிக.

"தடத்தமாய் நின்ற வொளிர் நிரஞ்சனப்பிரமமத்
தை" என்பது:—இஃதெனவும் அஃதெனவும் இஃ
தன்றெனவும் அஃதன்றெனவும் பிருதிவி முதலிய
கருவிகளாயும் அவை யல்லாததுமாகி நின்று
விளங்காநின்ற நிரஞ்சனமாகிய பிரமமத்தை.

தனக்கு வேண்டுதலும் வேண்டாமையுமாகிய பற்
றொருசிறிதுமின்றித் திருவருட்போத ஞானவுலகி
ட்டினை யுய்ப்பதாம். தோற்றக்கேடில்லாத அருட்ச
த்தியே யாதலின், "நிரஞ்சனப்பிரமமும்" ஆமாற

காண்க. நடத்தம்-பொதுவாயிருக்கை. நிரஞ்சனம் பற்றில்லாதது. நிராமயம்-அவத்தையில்லாதது. உதாரணம்:—

(தேவாரத் திருவருட்பா.)

"புக்கானை யெப்பொருட்கும் பொதுவானானை"

(வள்ளலார்.)

"சார்பிரண்டு மற்ற சமநிலைய சுத்தத்து
வீற்றிருப்ப னெங்கணி மலன்."

(தத்துவராயர்.)

"நிரஞ்சன நிராமய பராபர புராதன."

(திருவள்ளுவர்.)

"பற்றுக பற்றற்றான் பற்றினை."

(வள்ளலார்.)

"நிராமயமாய்நிட்களமாய்நீங்காப்புராதனமாய்."

(தேவாரத் திருவருட்பா.)

"நிராமய பராபர புராதன பராவுசிவ
ராக வருளென்."

என்பனவற்றாற் காண்க.

"சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்று இலகு திவ்ய தேசோமயத்தை" என்பது:—சிந்திக்குந் தன்மைத்தாகிய சித்தம் இன்னபடித்தென அறியாவண்ணம் அச்சித்தத்தினிடத்தே நின்று உள்ளும்புறம்புமாய்ப் பிரகாசிக்கின்ற உயர்வினு ளுயர்வான தேசோராசியை,

பாலுவுங் கன்றும் கரும்பிழனும் போலச் சிவசக்தியி
யின்கண் தற்போதமின்றி நீங்கா திருப்பவராகிய
பரையோடு ஒன்றென்றும் இரண்டென்றுஞ் சொல்லாக்
கலப்பிற் பரமசுகத்துடன் பொருந்தியிருந்தும், இருளக
நக்ஷத்திரங்கள் சந்திரன் முதலியன சூரியனொளி முன்
னொன்றுதலாறுபோல, எல்லாமும் எங்கும் எப்போது
தும் அகண்டாகாரசோதியே பரஞ்சோதியுமாகுதல்,
“திவ்யதிகசோமயமுமாம்” என்பதனால். இவ்வறு
பவக்காட்சிதோன்றித் தற்போதம் நீங்கினவழி விகற்ப
மின்றிஎங்குமாகப்பிரகாசிக்கின்றமையால் நிர்மல
பாதபடிசித்தத்தினின்றிலகுமென்றபடி. உதாரணம்:-

(அமுதசாரம்.)

“உள்ளத்தி னின்று மொளித்தான் பரன்குரவன்.”

(பிரமகீதை.)

“தீயரங்கொ தாறு மடைந்தழி வுறுத தெரிவா
காமை நின்றணி யால்வடிவு காறு மதுபோ
லாழு டம்பிலழி வின்றி மறை கின்றவைபல
ஞேமை யுய்யொரு ளுணர்ந்திட வுடம்பி லொளியாம்.”

(தேவாரத் திருவருட்பா.)

“சிந்தையு ளொன்றி நின்ற வெம்மான்.”

“ஊற்றிகி யுள்ளே யொளித்தாய் போற்றி.”

என்றும்,

(திருமூல நாயனார்.)

"பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்."

(பிரபுலிங்கலீலை.

"தூயபர மானந்த பரஞ்சோதி
தோன்றக்கண் டிருந்தார்."

(அருணகிரிநாத சுவாமிகள்.)

"அதல விதலமுத லந்தந்த லங்களென
வவனி யெனவமர ரண்டத்த கண்டமென [பானு
வகில சலதியென வெண்டிக்கில் விண்டுவென - வந்தி
அமுத கிரணமென வந்தத்து மந்த்ரமென
மறையு மறைகளின ருந்தத்து வங்களென [காசம்"
வணுவி லணுவெனநி றைந்திட்டுநின்றதொர் பரப்பிர

(திருமூல நாயனார்.)

"பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி யீசன்
பரமாண்டத் தூடே பகர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரனட மாடுமே."

(வள்ளலார்.)

"நிராமயமாய்நிட்களமாய் நித்தியமாய்நின்மலமாய்ப் புராதனமாயசஞ்சலமாய்ப் பூரணமாய்ப்புனிதமாய்ச் சராசரமாய்ச்சாக்ஷியாய்ச்சத்தியமாய்ச்சித்துருவாய் பராபரமாய்வெறுவெளியாயிருக்குமந்தபரமசிவம்."

“ஈசனைப் பரம தத்துவ னைவி
யீறிடை முதலில னாகி
யேசறு மளியா யெவைக்குமா தார
மாகிய தனக்கிறை யிலியாய்ப்
பாசமோ சகனா யநிமுத் தனுமாய்ப்
பகருஞா னந்தக் கடவு
ளாசையாற் காண்போர்க் கற்புத வடிவா
மம்பிகா பதியினைப் பணிவாம்.”

என்றும் வருவனவற்றாற் காண்க.

“சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமதான பரதே
தையை அஞ்சலிசெய்வாம்” என்பது:—சித்தாகிய
பரமாகாயத் தில் பூரணாகாரமாயிருக்கும் சிவசத்தி
யை அஞ்சலித்து வணக்கஞ் செய்வாம். எ-று.

சிற்பரவெளி:—பரமாகாயமாம், இதன்பொருளை
முதற்பாட்டுரையிற்காண்க. ஆகவே, பராகாயவரி
யான சிவமென்பதாம். எனவே, சிவத்துக்குட்டைய
பதனுடு பூரணாகாரமாய்த் தான்அதுவாகியும் அ
தானாகியும்உள்ளதுசத்தியென்றவாறும். உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சுப-௫. பா-௬.)

“அருளது சத்தி யாகு
மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை

மருளினை மருளால் வாட்டி
மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
டிருளினை யொளியா லோட்டி
யிரவியைப் போல வீசன் "

ஆன்மாக்களுக்குப்பந் தபோசனகாரியர்த்தாராகக்
கலைகளத்தாவத்தைகளிற் சியத்தினைறதிருவருளின்
ரைதம்பியாதிக்கேற்ப அச்சிவசக்தியும்பலை ஆதிவி
தப்பு அறிவுதொழில்களான ஐந்து சத்திகளாயும்,
நிவிர்த்தி முதலிய ஐந்து கலாசத்திகளாயும், வாமை
முதலிய அட்டசத்திகளாயும், உன்மனை சமனைமுத
லிய கலைகளாயும், இன்னும் காரியவேறுபாட்டாற்
பல்வகை உருவங்களையும் பெயர்களையும்பெற்று ஆறு
கோடி மாயா சத்திகளாகியும் பெற்று ஆறுகோடி
மாயாசத்திக ளாகியும் நிற்கும், சிவத்தோடென்
னும் பிரமாணமும் நிற்றலால் "அத்துவித வத்தனை"
எனத் தொடங்கி "நிற்பரவெளிக்குள்வளர் தற்பரம
தான பரதேவதையை" என முடித்து, அதனுண்
மையை யறிந்து வாழ்த்துதல் செய்தனர்.

"இனிச்சிவம் எவ்வாற்றுனிற்கும் அவ்வாற்றுற்சத்தி
யும் சமவேதமாய் நிற்குமென்னுமிபவாம் "அங்கிங்
கெனாதபடி யெங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தி
யாகி" என்னுஞ் செய்யுளில் ஆனந்தபூர்த்தியாகி அரு
ளொடுநிறைந்தது" என்பதற்கு "அத்துவிதவத்துவா
கிய சொற்பிரகாசத்தனி" என்பதனையும், "உயிர்க்கு

யிராய்த் தழைத்தது" என்பதற்கு "ஆனந்தமயமான, ஆதி" யென்பதனையும், "மனவாக்கினில்தட்டாமனின்றது" என்பதற்கு "ஏகத்துவசொரூபம்" என்பதனையும், "வழக்கிடவுநின்றது" என்பதற்கு "மதசம்மதம்பெறாச் சாந்தபதவி யோகமிதே" என்பதனையும், "சித்தாகியின்பமா யென்றைக்குமுள்ளதெது" என்பதற்கு "நிட்ப்ரபஞ்சப் பொருள்" என்பதனையும், "கங்குல்பகலறநின்ற எல்லையுளது" என்பதற்கு "சுத்தமான நிர்விகாரத்தை" என்பதனையும், "அது கருத்திற்கிசைந்தது" என்பதற்கு, "தடத்தமாய், நின்றொளிர் நிராமயம்" என்பதனையும், அதுவே கண்டனவெலாம்" என்பதற்கு, திவ்யதேசோமயம்" என்பதனையும், "மௌனவுரு வெளியதாகவுங்கருதி யஞ்சலிசெய்குவாம்" என்பதற்கு "சிற்பர வெளிக்குள் வளர் தற்பரமதான பரதேவதையை யஞ்சலிசெய்வாம்" என்பதனையும் நிரைநிரையாகக்கூட்டிப் பொருளுரைத்துக் கொள்க.

சிவம் எவ்வாறுநிற்கும் அவ்வாறு சத்தியுமாமென்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத்-உ. பா-எ௬.)

சத்தியாய்விந்துசத்தி யாய்மனோன்மனிதானுகி
யொத்துறுமகேசையாகி யுமைதிருவாணியாகி [கு
வைத்துறுஞ்சிவாதிக்கிங்ஙன் வருஞ்சத்தியொருத்தியா
மெத்திநின்றானீச னத்திறமவளுநிற்பள்.

(விநாயக புராணம்.)

“எத்திற மிறைவ னின்றன னவனும்
மெய்புகர வத்திற நின்று
பெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து
விளங்குறு ஏலிழையேத் தெய்வமாம்.”

மற்றும வருவனவற்று ளுணர்க.

சத்திக்கும் சிவத்திற்கும் பேதமின்மையென்பதற்கு உதாரணம்:—

(சிவஞானசித்தியார், சூத் - உ. பா - எசு.)

“சத்திரா னதபாதி தானுஞ் சிவமுமந்தச்
சத்திகா னதியாருந் தருப்வடிவான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமுமாகுஞ் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே.”

தேவதை, கடவுள், தெய்வம், சிவம்முதலிய சொற்கள் அஃறிணைப் பெயர்களாயினும் உயர்திணை முப்பாலினும் வழங்கிவருகின்றனவாதலாற் பரதேவதை என்பதைப் பரமசிவனென ஆண்பாலாகக் கோடலுமாம்.

“சித்பர வெளிக்குள் வளர் தற்பரம்” என்பதற்குதாரணம்:—

(நெஞ்சுவிடுதூது.)

“வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுங் கப்பா
லறு பொருளாய் நின்ற வொருவன்.”

(சிவப்பிரகாசம்.)

"சொற்பெறுமதீதம்வந்து தோன்றும்போதோன் றின்
சிற்பரமதனுளுள்ளச் செயலறத்திடவுதிக்கு [ற
தற்பரமாகிநின்ற சாக்கிராதிதந்தானே."

(அருணகிரிநாத சுவாமிகள்.)

"யானாகியவென்னை விழுங்கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே."

(திருவம்மானை.)

"சத்திய மானது சத்சித்தகா னம்மானை
தற்போதம் போனவிடந் தற்பரமா மம்மானை."

(திருவுந்தியார்.)

"இரவுபக லில்லா வின்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரய விரயநின் றுந்தீபற."

(விநாயக புராணம்.)

"நித்தியமாய் நிர்க்குணமாய் நின்மலமாய்
நிரஞ்சனமாய் நினைவுக கெட்டாச்
சத்தியமாய்த் தற்பரமாய்த் தத்துவமாய்ச்
சச்சிதா னந்த மாகி
யத்துவிதப் பொருளாகி யகண்டபரி
பூரணமா யமல ஞான
மெத்தியமுன் னத்தமர்ந்த விநாயகமான்
மியத்தவத்தோர் விருப்பிக் கேட்பார்."

தயா, உமா, மாலா, க்ருபா, சீதா, ப்ரமா, பூஜா, கலா, கதா, க்ரியாமுதலிய வடசொற்களினீற்றுயிர்கெட்டு ஐகாரமேற்றுத் தயை, உமை, மாலை, க்ருபை, சீதை, ப்ரமை, பூஜை, கலை, கதை, க்ரியை யெனத் தமிழில் வழங்குவதுபோலத் தேவதா என்னும் வடமொழியினீற்றுயிர்கெட்டு ஐகாரமேற்று 'தேவதை' யெனத் தமிழில் வழங்கிவந்தது. உதாரணம்:—

"வேத முதலாய் விரித்தபன் னூல்களு
மோதி யோதியு முரையாப் பொருடற்
போத மிறந்தோர் பொருந்துந் தேவதை
சீத மலரடி சிந்தையில் வைப்பாம்."

இச்செய்யுளிலும் "வத்துவை" "தனியை" "ஆதியை" "சொரூபத்தை" "வ்யோமநிலையை" நிட்பிரபஞ்சப்பொருளை" "நிர்விகாரத்தை" நிராமயத்தை" நிருபமத்தை "அஞ்சலிசெய்வாம்" எனத் தனித் தனிக் கூட்டியுரைத்துக் கொள்க.

இந்தச் செய்யுளுக்கு ஈசுவரிபரமாகப் பெண்பாலிலும், ஈசுவரன் பரமாக ஆண்பாலிலும் பொருளுரைத்தமை காண்க.

அ, அன், ரகிதம், நிர், நின், நிஷ் இவைவடமொழி எதிர்மறையைக் குறிக்கும் உபசர்க்கங்களென்னும் முதலடை மொழிகள்.

ஏ, இன் - அசைநிலைகள்.

அது—பகுதிப்பொருள் விகுதி.

பிரகாசம், ஒளிர், இலகு, தேசென்பனவும், அத்துவிதம், தனி, ஏகமென்பனவும், சாசுவதம், நித்தம் என்பனவும், வியோமம், வெளியென்பனவும், நின்மலம், சுத்தமென்பனவும் தனித்தனி ஒரு பொருட்கிளவிகள்.

ஆதி, அநாதி, ரகிதம், சகிதம், நிராலம்பம், ஆலம்பம் இவை ஒன்றற்கொன்று முரணாகவந்த சொற்கள்.

தனி, ஆதி, நிலை, நிர்விகாரம், நிராமயம், தேஜோமயம் முதலியவற்றை யிவற்றையுடையபொருளென வுருவகஞ் செய்யப்பட்டது.

"ஆயிரமுகத்தா னகன்றதாயினும், பாயிரமல்லது பனுவலன்றே" யென்றிருப்பதால் நூல் செய்யப்புகுந்த இக்கிரந்தகர்த்தர் இம்மூன்றுசெய்யுளாற் பாயிரம் புகன்றதாம். இது தெய்வவணக்கம் கூறியபடி. இவை கடவுள் வாழ்த்துத் துறையின் பகுதிகளாம்.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருப்பாடல்களில் முதல் மூன்றுபாட்டுகளுக்கு மகா வித்துவானாகவிருந்த புரசை, அஷ்டாவதானம்-சபாபதி முதலியாரவர்களியற்றிய உரை எமக்கு வெகு அருமையாகக் கிடைக்க, அவசியமுள்ள இடங்களிற் சீர்திருத்தி, ஆங்காங்கு சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்து பல சாத்திரங்களினின்றும் உதாரணங்களை யெடுத்துக் காட்டி அச்சிடுவித்தனம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமான சுவாமிகள் பாடல்.

திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்.

ஆசிரியவிருத்தம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெது மேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே

கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம். (க)

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம்வினையினா
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனாலெனது
சிற்சத்தியாலுணர்ந்து
காரனந்தங்கோடி வருஷிக்கதெனவன்பர்
கண்ணும்விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலைநங்
கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
பெரியமௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம். (உ)

அத்துவிதவத்துவைச் சொப்பிரகாசத்தனியை
யருமறைகண்முரசறையவே
யறிவினுக்கறிவாகி யானந்தமயமான
வாதியையநாதியேக
தத்துவசொரூபத்தை மதசம்மதம்பெறாச்
சாலம்பரகிதமான

சகலசகபுட்கல நிராலம்பமாலம்ப
சாந்தபதவ்யோமநிலையைச்
சித்தநிர்மலசகித நிஷ்ப்ரபஞ்சப்பொருளை
நிர்விஷயசுத்தமான
நிர்விகாரத்தைக் கூடத்தமாய்நின்றொளிர்
நிரஞ்சனநிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்தினின்றிலகு
திவ்யதேஜோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதானபர
தேவதையையஞ்சலிசெய்வாம். (௮)

பரிபூரணானந்தம்.

வாசாமகோசரிய மன்றியொருசாதன
மன்றுவாயுற்றும்வண்ணம்
வாலாயமாயும் பழகியறியேன்றுறவு
மார்க்கத்திலிச்சைபோல
நேசானுசாரியாய் விவகரிப்பேனந்த
நினைவையுமறந்தபோது
நித்திரைகொள்வேன்றேக நீங்குமெனவெண்ணிலோ
நெஞ்சந்துடித்தயருவேன்
பேசாதவானந்த நிட்டைக்குமறிவிலாப்
பேதைக்கும்வெகுதூரமே
பேய்க்குணமறிந்திந்த நாய்க்குமொருவழிபெரிய
பேரின்பநிட்டையருள்வாய்

பாசாடவிக்குளே செல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகுதேவதருவே
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (க

தெரிவாகவூர்வன நடப்பனபறப்பன
செயற்கொண்டிருப்பனவுமாந்
தேகங்களத்தனையு மோகங்கொள்பௌதிகஞ்
சென்மித்தவாங்கிறக்கும்
பிரிவாயபூதங்க ளொன்றோடொன்றாயழியு
மேற்கொண்டசேடமறவே
வெறுவெளிநிராலம்ப நிறைசூன்யமுபசாந்த
வேதவேதாந்தஞானம்
விரியாதபேரொளி பிறக்கின்றவருளருட்
பெற்றோர்கள்பெற்றபொருளே
பிறவாமையென்னுநற் பிறவியாய்வந்து
பேசாமையாகுமெனவே
பரிவாகவெனக்குநீ யறிவிக்கவந்ததே
பரிபாககாலமலவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (உ

ஆராயும்வேளையிற் பிரமாதியாலு
மையவொருசெயலுமில்லை
யமைதியொடுபேசாதே பெருமைபெறுகுணசந்த்ர
ராமெனவிருந்தபெரு

சோகமொருகோப மொருவேளைவரவந்த
நிறைவொன்றுமில்லாமலே
கெட்டியிர்த்துக்கட் டழிந்தாளுறவார்வசன
நிர்வாகரென்றபேரும்
பூசாயமாயொன்று பேசுமிடமொன்றைப்
புலம்புவார்சிவராத்திரிப்
போதுறாயிலோமென்ற விரதியருமறிதுயிற்
போலேயிருந்துதுயில்வார்
பிராந்திகளிலுள்ள செயலெலாமுடிவிலே
பார்க்கின் செயலல்லவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௯.)

அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே
மாமாயையில்லாமையே
யாமெனமதிவுமுண் டப்பாலுமறுகின்ற
வறிவினையறிந்துபார்க்கி
னெண்டிசைவிளக்குமொரு தெய்வவருளல்லாம
லில்லையெனுநினைவுமுண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகிநிற்பதே
யின்பமெனுமன்புமுண்டு
கண்டனவெலாமல்ல வென்றுகண்டனை செய்து
கருவிகரணங்களோயக்
கண்மூடியொருகண மிருக்கவென்றாற்பாழ்த்த
கர்மங்கள்போராடுதே

பண்டையுளகன்மமே கர்த்தாவெனும்பெயர்ப்
  பகுதிவாதிக்குமடியேன்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே.

சந்ததமுமெனதுசெய லினதுசெயலாயநோக்
  தன்மைநினையன்றியில்லாத்
தன்மையால்வேறலேன் வேதாந்தசித்தாந்த
  சமரசசுபாவமிதுவே
சிந்தனைதெளிவான வெனக்குருவியாடிய
  வியப்பைத்திருவுளமதியுமோ
மிக்கவிதிபிலேசற் றிருக்கவென்றுன்னடிமை
  வித்தசத்துவாசமங்கு
இக்கைதருமொகொன்றுதே மெய்மையைக்கண்டாங்
  கிரும்புமோசாதொலைக்காய்ச்
சென்மவருமோகவலையும் போக்கிநீதானற
  சிரத்தையெனும்வாளுருகனிப்
பந்தமறமெய்ஞ்ஞான நிராமுக்தர்தெளிவிப்
  பாலனாத்தருள்செய்குவாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே.

பூதலயமாகின்ற மாயைமுதலென்பர்சிலர்
  போதபுலனடக்குமிடமே
பொருளென்பர்சிலர் காலமுடிவென்பர்சிலர்தூல
  போனவிடமென்பர்சிலபேர்

...தவடிவென்பர்சிலர் சித்துமயமென்பர்சிலர்
கட்டநடுவேயிருந்த
...ரமென்பர்சிலருருவ மாமென்பர்சிலர்கருதி
னாடிலருவென்பர்சிலபேர்
...பதமதைவிட்டெட்ட நிலையென்றிடுவர்சிலர்
பேசினருவென்பர்சிலபேர்
...பின்னுமுன்னுங்கெட்ட சூனியமதென்பர்சிலர்
பிறவுமேமொழிவரிவையாற்
...பரதரசமாய்மனது சஞ்சலப்படுமலாற்
பரமசுகநிட்டைபெறுமோ
...பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௯)

...அந்தகாரத்தைதபோ ரகமாக்கியின்போலெ
னற்றைவர்க்குருக்கினவரா
...சல்லறிவுதானுமே பற்றினதுபற்று
மழுத்தவுந்தலையீதிலே
...சொக்தமாமெழுதப் படித்ததார்மெய்ஞ்ஞான
சுகநிட்டைசேராமலே
...சோற்றுத்துருத்தியைச் சதமெனவுமுன்னிண்டு
தூக்கவைத்தவரார்கொலோ
...தக்கதாய்முதலான வகிலப்ரபஞ்சத்
தினைத்தந்தெனதாசையோ
...தன்னையேநோவனோ பிறரையேநோவனோ
தற்காலமதைநோவனோ

பந்தமானதுதந்த வினையையேபோலவினை
பரமார்த்தமேதுமறியேன்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௭)

வாராதெலாமொழிய வருவனவெலாமெய்த
மனதுசாக்ஷியதாகவே
மருவநிலைதந்ததும் வேதாந்தசித்தாந்த
மரபுசமரசமாகவே
பூராயமாயுரை யாகமந்தந்ததும்
பொய்யுடலைநிலையன்றெனப்
போதநெறிதந்ததுஞ் சாசுவதவானந்த
போகமேவீடென்னவே
நீராளமாயுருக வுள்ளன்புதந்ததும்
நின்னதருளின்னுமின்னு
நின்னையே துணையென்ற வென்னையேயாக்கவொரு
நினைவுசற்றுண்டாகிலோ
பாராதியறியாத மோனமேயிடைவிடாப்
பற்றாகநிற்கவருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (அ)

ஆழாழி கரையின்றி நிற்கவிலையோகொடிய
வாலமமுதாகவிலையோ
வக்கடலின்மீதுவட வானனிற்கவில்லையோ
வந்தரத்தகிலகோடி

நாமமிலேசித்த னில்லேயோமேருவுந்
 தநுவாகவளேயவில்லேயோ
சத்தமேகங்களும் வச்ரதரனணேயிற்
 சஞ்சரித்திடவில்லேயோ
வாழாதுவாழவே யிராமனடியாற்சிலேயு
 மடமங்கையாகவில்லேயோ
மணிமந்த்ராதியால் வேண்டுசித்திகளுலக
 மார்க்கத்தில்வைக்கவில்லேயோ
பரமானவென்மனங் குவியவொருதந்திரம்
 பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
 பரிபூரணுனந்தமே. (௧)

ஆசைக்கொரளவில்லே யகிலமெல்லாங்கட்டி
 யாளினுங்கடன்மீதிலே
யாணைசெலவேநினைவ ரளகேசனிகராக
 வம்பொன்மிகவைத்தபேரு
நேசித்துரசவாத வித்தைக்கலேந்திடுவர்
 நெடுநாளிருந்தபேரு
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி
 நெஞ்சுபுண்ணுவரெல்லாம்
யோசிக்கும்வேளேயிற் பசிதீரவுண்பது
 முறங்குவதுமாகமுடியு
முள்ளதேபோதுநா னெனெனக்குளறியே
 யொன்றைவிட்டொன்றுபற்றிப்

பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற
பரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௧0)

பொருள்வணக்கம்.

நித்தியமாய்நிர்மலமாய்நிட்களமாய்நிராமயமாய்
நிறைவாய்நீங்காச்
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச்சமீபமுமாய்த்துரியநிறை
சுடராயெல்லாம்
வைத்திருந்ததாரகமா யானந்தமயமாகி
மனவாக்கெட்டாச்
சித்துருவாய்நின்றவொன்றைச் சுகாரம்பப்பெருவெ
ளியைச் சிந்தைசெய்வாம். (௧)

சாதுமனநினையுமந்த நினைவுக்குநினைவாகி
யாதின்பாலும்
பேதமறநின் றுயிருக் குயிராகியன்பருக்கே
பேரானந்தக்
கோதிலமுதூற்றரும்பிக் குணங்குறியொன்றறத்தன்
னைக் கொடுத்துக்காட்டும்
நீதில்பராபரமான சித்தாந்தப்பேரொளியைச்
சிந்தைசெய்வாம். (௨)

பெருவெளியைம்பூதம் பிறப்பிடமாய்ப்பேசாத
பெரியமோனம்

வருமிடமாய்மனமாதிக் கெட்டாதபேரின்ப
மயமாய்ஞானக்
குருவருளாற்காட்டிடவு மன்பரைக்கோத்தறவிழுங்
கிக் கொண்டப்பாலுந்
தெரிவரிதாய்க்கலந்ததெந்தப் பொருளந்தப்
பொருளினையாஞ் சிந்தைசெய்வாம். (ரு)

இகபரமுமுயிர்க்குயிரை யானெனதற்றவருறவை
யெந்நாளுஞ்
சுகபரிபூரணமான நிராலம்பகோசரத்தைத்
துரியவாழ்வை
மகம்கிழவருந்தேனை முக்கனியைக்கற்கண்டை
யமிர்தநாடி
மொருமொகெனவிருவிழிநீர் முத்திறைப்பக்கரமலர்
கண் முகிழ்த்துநிற்பாம். (சு)

சாதிகுலம்பிறப்பிறப்புப் பந்தமுத்தியருவுருவத்
தன்மைநாம
மேதுமின்றியெப்பொருட்கு மெவ்விடத்தும்பிரிவற
நின் றியக்கஞ்செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழநிறைவான
துரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத் திருவருளோனினைவாகச்
சிந்தைசெய்வாம். (எ)

இந்திரசாலங்கனவு கானலினீரெனவுலக
மெய்க்குத்தோன்றச்

சந்ததமுஞ்சிற்பரத்தா லறியாதகற்பரத்தைச்
சார்ந்துவாழ்க
புந்திமகிழுறநாளுந் தடையறவானந்தவெள்ளப்
பொலிகவென்றே
வந்தருளுங்குருமௌனி மலர்த்தாளை யநுதினமு
வழுத்தல்செய்வாம். (௬)

பொருளாகக்கண்டபொரு ளெவைக்குமுதற்
பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக்கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த
செழுந்தேனாகி
யருளானோர்க்கம்புறமென் றுன்னாதபூரணவா
னந்தமாகி
யிருமைதரவிளங்குபொரு ளியாதந்தப்பொருளினையா
மிறைஞ்சிநிற்பாம். (௭)

அருமறையின்சிரப்பொருளாய் விண்ணவர்வாழ்முனி
வர்சித்த ராதியானோர்
தெரிவரியபூரணமாய்க் காரணங்கற்பனைகடந்த
செல்வமாகிக்
கருதரியமலரின்மண மெள்ளிலெண்ணெயுடலுயிர்
போற் கலந்தெந்நாளு
ஓரியல்புடனிருக்க பெரியபொருளியாதந்தனைத்
தொழுதல்செய்வாம். (௮)

விண்ணாதிபூதமெல்லாந் தன்னடக்கிவெறு
வெளியாய்ஞானக்

கன்றார்க்கண்டவன்பர் கண்ணூடேயானந்தக்
கடலாய்வேறொன்
றென்னாதபடிக்கிரங்கித் தானாகச்செய்தருளு
மிறையேயுன்றன்
மன்றாருஞ்சாந்தவரு டனைநினைந்துகரமலர்க
டலைமேற்கொள்வாம். (கூ)

வின்னிறைந்தவெளியாயென் மனவெளியிற்
கலந்தறிவாம் வெளியினூடுந்
தன்னிறைந்தபேரமுதாய்ச் சதானந்தமானபெருந்
தகையேநின்பா
லுன்னிறைந்தபேரன்பா லுள்ளுருகிமொழிகுளறி
யுவகையாகிக்
கன்னிறைந்தபுனலுகுப்பக் கரமுகிழ்ப்பநின்னரு
ளைக் கருத்தில்வைப்பாம். (க0)

வேறு.

ஆதியந்தங்காட்டாதமுதலாயெம்மை
யடிமைகொளவளர்த்தெடுத்தவன்னைபோல
நீதிபெறுங்குருவாகி மனவாக்கெட்டா
நிச்சமாய்ச்சொச்சமதாய் நிமலமாகி
வாதமிடுஞ்சமயநெறிக்கரியதாகி
மௌனத்தோர்பால்வெளியாய் வயங்காநின்ற
சோதியையென்னுயிர்த்துணையை நாடிக்கண்ணீர்
சொரியவிருகரங்குவித்துத்தொழுதல்செய்வாம்.

அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறா
யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகியல்லதாகிப்
பரமாகிச்சொல்லரியபான்மையாகித்
துகளறுசங்கற்பவிகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச்சுத்தமாகி
நிகரில்பசுபதியானபொருளைநாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பானினைதல்செய்வாம்.

சின்மயானந்தகுரு.

அங்கைகொடுமலர்தூவி யங்கமதுபுளகிப்ப
வன்பினுருகிவிழிநீ
ராறாகவாராத முத்தியினதாவேச
வாசைக்கடற்குண்மூழ்கிச்
சங்கரசுயம்புவே சம்புவேயெனவுமொழி
தழுதழுத்திடவணங்குஞ்
சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கனேனையுந்
தண்ணருள்கொடுத்தாள்வையோ
துங்கமிகுபக்குவச் சனகன்முதன்முனிவோர்க
டொழுதருகில்வீற்றிருப்பச்
சொல்லரியநெறியையொருசொல்லாலுணர்த்தியே
சொரூபாநுபூதிகாட்டிச்
செங்கமலபீடமேற் கல்லாலடிக்குள்வளர்
சித்தாந்தமுத்திமுதலே

ஏரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௧)

ஆக்கையெனுமிடிகரையை மெய்யென்றபாவிரா
ணத்தாவிகவாஞ்சையாத
அரியகொம்பிற்றேனை முடவனிச்சித்தபடி
யாகுமறிவிலிமுனின்பந்
தாக்கும்வகையேதிநாட் சரியைகிரியாயோக
சாதனம்விடுத்ததெல்லாஞ்
சன்மார்க்கமல்லவிவை நிற்கவெண்மார்க்கங்கள்
சாராதபேரறிவதாய்
ஆக்குமனமணுகாத பூரணப்பொருள்வந்து
வாய்க்கும்படிக்குபாயம்
அருவித்துவட்டாத பேரின்பமானசுக
வாரியினைவாய்மடுத்துத்
தேக்கித்திளைக்கநீ முன்னிற்பதென்றுகாண்
சித்தாந்தமுத்திமுதலே
ஏரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௨)

ஒன்றியிருக்கநா னென்கின்றவாணவ
மடைந்திட்டிருக்கலோப
மருளின்மைகூடக் கலந்துள்ளிருக்கமே
லாசாபிசாசமுதலாம்
வெவ்வியகுணம்பல விருக்குமென்னறிவூடு
மெய்யனீவீற்றிருக்க

விதியில்லையென்னிலோ பூரணனெனும்பெயர்
விரிக்கிலுரைவேறுமுளதோ
கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினாற்
கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை
கடிதகலவலியவரு ஞானசஞ்சீவியே
கதியானபூமிநடுவுட்
செவ்விதின்வளர்ந்தோங்கு திவ்வியகுணமேருவே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௧)

ஐவகையெனும்பூத மாதியைவகுத்ததனு
ளசரசரபேதமான
யாவையும்வகுத்துநல் லறிவையும்வகுத்துமறை
யாதிநூலையும்வகுத்துச்
சைவமுதலாமளவில் சமயமும்வகுத்துமேற்
சமயங்கடந்தமோன
சமரசம்வகுத்தநீ யுன்னைநானணுகவுந்
தண்ணருள்வகுக்கவிலையோ
பொய்வளருநெஞ்சினர்கள் காணாதகாட்சியே
பொய்யிலாமெய்யரறிவிற்
போதபரிபூரண வகண்டிதாகாரமாய்ப்
போக்குவரவற்றபொருளே
தெய்வமறைமுடிவான பிரணவசொரூபியே
சித்தாந்தமுத்திமுதலே

சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே (௫)
சின்மயானந்தகுருவே.

ஐந்துவகையாகின்ற பூதபேதத்தினு
லாகின்றவாக்கைநீர்மே
லெழுகின்றகுமிழியென நிற்கின்றதென்னநா
னறியாதகாலமெல்லாம்
புந்திமகிழுறவுண் டுடுத்தின்பமாவதே
போந்தநெறியென்றிருந்தேன்
பூராயமாகநின தருள்வந்துணர்த்தவிவை
போனவழிதெரியவில்லை
யெந்தநிலைபேசினு மிணங்கவிலையல்லா
லிறப்பொடுபிறப்பையுள்ளே
யெண்ணினெஞ்சம் பகீரெனுந்துயிலுறா
துவிழியுமிரவுபகலாய்ச்
செந்தழலின்மெழுகான தங்கமிவையென்கொலோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே (௬)
சின்மயானந்தகுருவே.

காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போற்
கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டல்லலாங்
காப்பிட்டதற்கிசைந்த
பேரிட்டுமெய்யென்று பேசுபாழ்ம்பொய்யுடல்
பெலக்கவிளையமுதமூட்டிப்

ரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்
டரிட்டதன்சுருதி மொழிதப்பினமனைவிட்
டிடருறவுறுக்கியிடர்தீர்த்
திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி
லிசைந்துதுயில்கொண்மினென்று
சீரிட்டவுலகன்னை வடிவானவெந்தையே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௩)

கருமருவுகுகையனைய காயத்தினடுவுட்
களிம்புதோய்செம்பனையயான்
காண்டகவிருக்கநீ ஞானவனன்மூட்டியே
கனிவுபெறவுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின் னருளானகுளிகைகொடு
பரிசித்துவேதிசெய்து
பத்துமாற்றங்க மாக்கியேபணிகொண்ட
பக்ஷத்தையென்சொல்லுவே
னருமைபெருபுகழ்பெற்ற வேதாந்தசித்தாந்த
மாதியாமந்தமீது
மத்துவிதநிலையரா யென்னையாண்டுன்னடிமை
யானவர்களறிவினூடுந்
திருமருவுகல்லா லடிக்கீழும்வளர்கின்ற
சித்தாந்தமுத்திமுதலே

சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௭)

கூடுதலுடன்பிரித லற்றுநிர்த்தொந்தமாய்க்
குவிதலுடன்விரிதலற்றுக்
குணமற்றுவரவினொடு போக்கற்றுநிலையான
குறியற்றுமலமுமற்று
நாடுதலுமற்றுமேல் கீழ்நடுப்பக்கமென
நண்ணுதலுமற்றுவிந்து
நாதமற்றைவகைப் பூதபேதமுமற்று
ஞாதுருவின்ஞானமற்று
வாடுதலுமற்றுமே லொன்றற்றிரண்டற்று
வாக்கற்றுமனமுமற்று
மன்னுபரிபூரணச் சுகவாரிதன்னிலே
வாய்மடுத்துண்டவசமாய்த்
தேடுதலுமற்றவிட நிலையென்றமௌனியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௮)

தாரகவருவெலாந் தந்தருளமௌனியாய்த்
தாபனையகருணைகாட்டித்
தாளிணையென்முடிசூட்டி யறிவிற்சமாதியே
சாசுவதசம்ப்ரதாய
மோராமன்மந்திரமு முன்னைமன்முத்திநிலை
யொன்றேடிரண்டெனைம

அரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்
டரிட்டதன்சுருதி மொழிதப்பினமனைவிட்
டிடருறவுறாக்கியிடர்தீர்த்
திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி
லிசைந்துதுயில்கொண்மினென்று
சிரிட்டவுலகன்னை வடிவானவெந்தையே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௯

கருமருவுகுகையனைய காயத்தினடுவுட்
களிம்புதோய்செம்பனையயான் |
காண்டகவிருக்கநீ ஞானவனன்மூட்டியே
கனிவுபெறவுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின் னருளானகுளிகைகொடு
பரிசித்துவேதிசெய்து
பத்துமாத்தங்க மாக்கியேபணிகொண்ட
பக்ஷத்தையென்சொல்லுவே
னருமைபெறுபுகழ்பெற்ற வேதாந்தசித்தாந்த
மாதியாமந்தமீது
மத்துவிதநிலையரா யென்னையாண்டென்னுடைமை
யானவர்களறிவினாடுந்
திருமருவுகல்லா லடிக்கீழ்வளர்கின்ற
சித்தாந்தமுத்திமுதலே

சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
    சின்மயானந்தகுருவே. (௭)

...ளிதலுடன்பிரித லற்றுயிர்த்தொந்தமாய்க்
    குளிதலுடன்பிரிதலற்றுக்
குணமற்றுவாளினொடு போக்கற்றுயிலையான
    குறியற்றுமலமுமற்று
...டுதலுமற்றுமேல் கீழ்நடுப்பக்கமென
    ...ன்றாதலுமற்றுநின்று
...ந்தமற்றவைகைப் பூதபேதமுமற்று
    நானாருநின்ஞானமற்று
...வாடுதலுமற்றுமே லொன்றற்றிரண்டற்று
    வாக்கற்றுமனமுமற்று
...மன்னுபரிபூரணச் சுகவாரிதன்னிலே
    வாய்மடுத்தாண்டவசமாய்த்
தேடுதலுமற்றவிட மிலையென்றமௌனியே
    சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
    சின்மயானந்தகுருவே. (அ)

தாராதவருளெலாந் தந்தருள்மௌனியாய்த்
    தாயனையகருணைகாட்டித்
தாளிணையென்முடிசூட்டி யறிவிற்சமாதியே
    சாசுவதசம்ப்ரதாய
மோராமன்மந்திரமு முன்னைமன்முத்திரை
    யொன்றோடிரண்டெனும

ஒளியெனவும்வெளியெனவு முருவெனவுநாதமா
　　மொலியெனவுமுணர்வுறாமற்
பாராதுபார்ப்பதே யேதுசாதனமற்ற
　　பரமவனுபூதிவாய்க்கும்
பண்பென்றுணர்த்தியது பாராமலங்கிலே
　　பதிந்தநின்பழவடியர்தஞ்
சீராயிருக்கநின தருள்வேண்டுமையனே
　　சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
　　சின்மயானந்தகுருவே. (௩)

போதமாயாதிநடு வந்தமுமிலாததாய்ப்
　　புனிதமாயவிகாரமாய்ப்
போக்குவரவில்லாத வின்பமாய்நின்றநின
　　பூரணம்புகலிடமதா
தாதரவுவையாம லறிவினைமறைப்பதுநின்
　　னருள்பின்னுமறிவின்மைதீர்க்
வறிவித்துநிற்பதுநின் னருளாகிலெளியனேற்
　　கறிவாவதேததறிவிலா
வேதம்வருவகையேது வினையேதுவினைதனக்
　　கீடானகாயமேதென்
னிச்சாசுதந்தரஞ் சிறிதுமிலைபிகபர
　　பிரண்டினும்பல்லுநீரத்
தீதிலருள்கொண்டினியுணர்த்தியெனையாள்வையோ
　　சித்தாந்தமுத்திமுதலே

ரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௧௦)

த்திநெறியிலேநின்று நவகண்டபூமிப்
பரப்பைவலமாகவந்தும்
ரவையிடைமூழ்கியு நதிகளிடைமூழ்கியும்
பசிதாகமின்றியெழுநா
த்தியிடைநின்றமுதிர் சருகுபுனல்வாயுவினை
வன்பசிதனைக்கடைத்து
மௌனத்திருந்துமுயர் மலைநுழைவுபுக்கியு
மன்றுதசநாடிமுற்றுஞ்
த்திசெய்தும்மூல ப்ராணனோடிங்கியைச்
ந்திராமவட்டத்தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டு மற்பவுடல்கற்பங்க
டோறந்நிலைநிற்கவிறு
ததிசெய்துஞ்ஞான மலதுகதிகூடுமோ
சித்தாந்தமுத்திமுதலே
ரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௧௧)

மௌனகுருவணக்கம்.

ஆசைகளைத்தினை ர்க்துளிபடவுதறி
யாங்காரமுனையைப்பற்றி
த்துவித்தாடதமாகி மதமாறமாறுக
வன்னைகயின்விலாழியாக்கிப்

பாசவிருடன்னிழ லெனச்சுளித்தார்க்குமேற்
பார்த்துப்பரந்தமனதைப்
பாரித்தகவளமாய்ப் பூரிக்கஉண்டுமுக
படாமன்னமாயைநூறித்
தேசுபெறநீவைத்த சின்முத்திராங்குசச்
செங்கைக்குளேயடங்கிச்
சின்மயானந்தசுக வெள்ளம்படிந்துநின்
திருவருட்பூர்த்தியான
வாசமுறுசற்சார பீடத்தென்னையொருஞான
மத்தகஜமெனவளர்த்தாய்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே.

ஐந்துவகையாகின்ற பூதமுதனாதமு
மடங்கவெளியாகவெளிசெய்
தறியாமையறிவாதி பிறிவாகவறிவார்க
ளறிவாகநின்றநிலையிற்
சிந்தையறநில்லென்று சும்மாவிருத்திமேற்
சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநா னதுவாயிருக்கநீ
செய்சித்ரமிகநன்றுகா
ணைந்தைவடவாற்பரம குருவாழ்கவாழ்கவரு
ளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழ வேதாகமத்துணி
யிரண்டில்லையொன்றென்னவே

வந்தகுருவேவீறு சிவஞானசித்திநெறி
மௌனோபதேசகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (உ)

ஆதிக்கநல்கினைவ ராரிந்தமாயைக்கெ
னறிவன்றியிடமில்லையோ
அந்தரப்புட்பமுங் கானலின்னீருமோ
ரவசரத்துபயோகமோ
போதித்தநிலையையு மயக்குதேயபயநான்
புக்கவருடோற்றிடாமற்
பொய்யானவுலகத்தை மெய்யாநிறுத்தியென்
புந்திக்குளிந்த்ரஜாலஞ்
சாதிக்குதேயிதனை வெல்லவுமுபாயநீ
தந்தருள்வதென்றுபுகல்வாய்
சன்மதஸ்தாபனமும் வேதாந்தசித்தாந்த
சமரசநிர்வாகநிலையு
சாதிக்கொடண்டப் பரப்பெலாமறியவே
வந்தருளுஞானகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௩)

மின்னனையபொய்யுடலை நிலையென்றுமையிலகு
விழிகொண்டுமையல்பூட்டு
மின்னார்களின்பமே மெய்யென்றும்வளர்மாட
மென்வீடுசொர்க்கமென்றும்

பொன்னையறியாதுவளர் பொருளென்றுபோற்றியிப்
    பொய்யுடலைநிதிநாடிப்
பொறையறிவுதுறவீதலாதிநற்குணமேலாப்
    போக்கிலேபோகவிட்டுத்
தன்னிகரிலாபாதி பாழ்ப்பேய்பிடுங்கிடத்
    தாணியிரையேலாபதன்
சமயநடைசாராமல் வேதாந்தசித்தாந்த
    சமரசசிவானுபூதி
மன்னவொருசொற்கொண் டென்னைத்தடுத்தாண்ட
    மின் வாழ்வித்தஞானகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
    மரபில்வருமௌனகுருவே (௩)

போனகமிருக்கின்ற சாலையிடைவேண்டுவ
    புசித்தற்கிருக்குமதுபோற்
புருஷர்பெறுதர்மாதி வேதமுடனாகமம்
    புகலுமதிகுலாம்பயன்
ஞானநெறிமுக்யநெறி காட்சியனுபவமுத
    னைவிதங்கடேர்ந்து
நானெனக்குளறு படைபுடை பெயர்ந்திடவு
    நான்குசாதனமுமோர்ந்திட்
டானநெறியாஞ்சரியை யாதிசோபானமுற்
    றனுபக்ஷசம்புபக்ஷசம்புபக்ஷ
மாமிருளிகற்பமு மாயாதிசேனையு
    மறிந்திரண்டொன்றென்னுமோர்

மோனந்தவிகற்பமற வென்றுநிற்பதுகடந்
தோ வென்றபரமகுருவே.
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௫)

கல்லாதவறிவுமேற் கேளாதகேள்வியுங்
கருணைசித்திததாயில்லாக்
காட்சியுங்கொண்டனவு கட்காமமாட்சியாக்
காதலித்திடுநெஞ்சமும்
பொல்லாதபொய்ம்மொழியு மல்லாதநன்மைகள்
பொருந்துநன்மையுமறியேன்
புருஷர்வடிவானதே யல்லாதுகனவிலும்
புருஷார்த்தமேதுமில்லை
வினைவல்லாமைக்கீ யறியாதநன்றெனக்
செவ்வைநன்முமவன்னமோ
திருமேனியிருமௌனதவர்க் கொளிதாரகம்பெறு
மௌனகுருவின்றருடாரகம்
எல்லாமென்னும்பெய ருனக்குள்ளேயிந்த
வஞ்சகனையாளனையாய்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௬)

கானகமில்க்குடிபுகுமொழிகுலாவுநின்
கண்காணமைதயாநிதி
நாட்டமுங்கையா னெகிழ்க்கெனப்பெரிய
கட்டைமிகவேத்திவருமே

போனகமமைந்ததென வக்காமமேதனுநின்
    பொன்னடியினின்றசொலுமே
புவிராஜர்கவிராஜர் தவராஜரென்றுனைப்
    போற்றிஜயபோற்றியென்பார்
ஞானகருணாகர முகங்கண்டபோதிலே
    நவநாதசித்தர்களுமுன்
னட்பினைவிரும்புவார் சுகர்வாமதேவர்முதல்
    ஞானிகளுமுனைமெச்சுவார்
வானகமுமண்ணகமும் வந்தெதிர்வணங்கிடுமுன்
    மகிமையதுசொல்லவெளிதோ
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
    மரபில்வருமௌனகுருவே. (எ)

சருகுசலபக்ஷணிக ளொருகோடியல்லாற்
    சகோரபக்ஷிகள்போலவே
தவளமதியொழுகமிர்த தாரையுண்டறியாத
    தன்மயானந்தகோடி
யிருவினைகளற்றிரவு பகலென்பதறியாத
    வேகாந்தமோனஞான
வின்பநிஷ்டையர்கோடி மணிமந்த்ரசித்திநிலை
    யெய்தினர்கள்கோடிசூழக்
குருமணியிழைத்திட்ட சிங்காதனத்தின்மிசை
    கொலுவீற்றிருக்குநின்னைக்
கும்பிட்டனந்தமுறை தெண்டனிட்டென்மனக்
    குறையெலாந்தீரும்வண்ண

..ருமலரெடுத்துனிரு தாளையர்ச்சிக்கவெனை
வாவென்றழைப்பதெந்நாண்
..ந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௮)

..ங்காரமானகுல வேடவெம்பேய்பாழ்த்த
வாணவத்தினும்வலிதாகா
..ரிவினைமயக்கிடு நடுவறியவொட்டாதி
யாதொன்றுதொடினுமதுவாய்த்
..ங்காதமொழிபேசு மிகரப்பிரமாதி
தம்மொடுசமானமென்னுங்
..டையற்றதேரிலஞ் சுருலாணிபோலவே
தன்னிலைசையாதநிற்கு
..நீங்காரெனக்குநிக ரென்னப்ரதாபித்
திராவணைகாரமாகி
..பிதயவெளியெங்கணுந் தன்னரசுநாடுசெய்
திருக்குமிதனொடேகோரமும்
..வாங்காவிலாவடிமை போராடமுடியுமோ
மௌனவுபதேசகுருவே
..ந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௯)
..பற்றுவெறுவிதமாகி யொன்றைவிட்டொன்றனைப்
பற்றியுழல்கிருமிபோலப்
..பாழ்ஞ்சிந்தைபெற்றநான் வெளியாகநின்னருள்
பார்த்துமறியேன்றவிதமோ

சிற்றறிவதன்றியுமெவரேனுமொருமொழி
திடுக்கென்றுரைக்கப்பொறா
சிந்தைதெளியாக்கேவ லறையனையடுத்தவெஞ்
சீநெஞ்சமளவாவ
வுற்றுணரவுணர்வற்றவன் மத்தவெறியினர்போல
வுளறுவேன்முத்திமார்க்க
முணர்வதெப்படியின்ப துன்பசமமானமா
யுறுவதெப்படியாயினு
மற்றெனக்கையநீ சொன்னவொருவார்த்தையிலே
மலையிலக்கெனநம்பினேன்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௧0)

கருணாகரக்கடவுள்.

நிர்க்குணநிராமய நிரஞ்சனநிராலம்ப
நிர்விஷயகைவல்யமா
நிஷ்களவசங்கசஞ் சலரகிதநிர்வாசன
நிர்த்தொந்தநித்தமுக்த
தற்பரவிஸ்வாதீத வ்யோமபரிபூரண
சதானந்தஞானபகவ
சம்புசிவசங்கர சர்வேசவென்றுநான்
சர்வகாலமுநினைவனே
வற்புதவகோசர நிவர்த்திபெறுமன்பருக்
கானந்தபூர்த்தியான

சத்தனித்திச்சய சொரூபசாக்ஷாத்கார
அனுபூதியனுபவமும்
தற்பரவிசாரணை முற்றுடன்வடவிருக்
கண்ணாயிருந்தகுருவே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (க)

மண்ணாதியைந்தொடு புறத்திலுளகருவியும்
வாக்காதிகர்மேந்திரியமும்
விள்ளநின்றசப்தாதி மனமாதிகலையாதி
மன்னுசுத்தாதியுடனே
தொண்ணூற்றொடாறுமற்றுள்ளனவுமௌனியாய்ச்
சொன்னவொருசொற்கொண்டதே
தூவெளியதாயகண் டானந்தசுகவாரி
தோற்றுமனதவென்சொல்லுவேன்
பண்ணாருமிசையினொடு பாடிப்படித்தருட்
டாண்மைநெறிநின்றுகளறுப்
பக்குவவிசேடராய் நெக்குநெக்குருகிப்
பணிந்தெழுந்திருகைகூப்பிக்
கண்ணருவிபாயநின்றவன்பரையெலாங்
கண்டிடாக்காட்சியுறவே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (உ)

எல்லாமுனதுடைமையே யெல்லாமுனுடைமையே
யெல்லாமுனுடையசெயலே

யெங்கணும்வியாபியென் றசொலுமியல்பென்
　　றிருக்காதிவேதமெல்லாஞ்
சொல்லான்முழக்கியது மிக்கவுபகாரமாச்
　　சொல்லிறந்தவரும்விண்டு
சொன்னவையுமிவைநல்ல குருவானபேருந்
　　தொகுத்தநெறிதானுமிவையே
யல்லாமலில்லையென நன்றாவறிந்தே
　　னறிந்தபடிநின்றுசுகநா
னாகாதவண்ணமே யிவ்வண்ணமாயினே
　　னதுவுமினதருளென்னிலோ
கல்லாதவறிவினுக் குள்ளேயுணர்ந்தினி
　　கதிக்குவகையேதுபுகலாய்
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
　　கருணாகரக்கடவுளே. (௮)

பட்டப்பகற்பொழுதை யிருளென்றவருணர்தம்
　　பக்ஷபோலெனதுபக்ஷம்
பார்த்தவிடமெங்கணுங் கோத்ததிலேநம்பாது
　　பரமவெளியாகவொருசொற்
றட்டுடன்மௌனியாயருள்செய்திருக்கவுஞ்
　　சேராமலாராகநான்
சிறுவீடுகட்டியதினடுசோற்றையுண்டுண்டு
　　தேக்குசிறியார்கள்போல
நட்டணையதாக்கற்ற கல்வியும்விவேகமு
　　நன்னியமாகவுன்னி

...வென்றநீயென் றிரண்டில்லையென்னவே
   நடுவேவழுவாத்தமனதைக்
...ட்டவறியாமலே வாடினேனெப்போது
   கருணைக்குறித்தாவனோ
...ருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
   கருணாகரக்கடவுளே. (ச)

...மெய்விடாதாவுள்ள மெய்யருளிருந்துநீ
   மெய்யானமெய்யையெல்லா
...மெய்யெனவுணர்த்தியது மெய்யிதற்கையமிலை
   மெய்யேதுமறியாவெறும்
...பொய்விடாப்பொய்யினே னுள்ளத்திருந்துதான்
   பொய்யானபொய்யையெல்லாம்
...பொய்யெனவுண்மைபோ புகலவைத்தாயெனிற்
   புன்மையேனென்செய்குவேன்
...மைவிடாதெழுநீல கண்டகுருவேவிஷ்ணு
   வடிவானஞானகுருவே
...மலர்மேவிமறையோது நான்முகக்குருவே
   மதங்கெட்டாறினறகுருவே
...ங்கவிடாதேயென்ற வன்பருக்கன்பாய்க்
   கருத்தூடுணர்த்துகுருவே
...கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
   கருணாகரக்கடவுளே. (ரு)

...யன்னோனுனக்கான பூசையொருவடிவிலே
   பாவித்திறைஞ்சவாங்கே

பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமலரெடுக்க மனமும்
நண்ணேனலா லொருவர் தான் குவிக்கவுமெனி
னாணுமென் னுளநிற்றிநீ
கான்றுப்பிப்பொ நமைக்குர்ப்பொதவ
னுன் பூசைசெய்வன் முறையோ
விண்ணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்கவிளக்கியே சென்னியப்பூமிக்குள்
வித்தேயவித்தின் முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணமே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. (௮)

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமெனலாற்
சகமீதிருந்தாலு மரணமுண்டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தையிற் பார்த்திது போதிப்பதல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாச்
திவ்யருமைமார்க்கண்டர் சுகாதிமுனிவோர்கள்
சித்தாந்தசித்தபரலோரா
விந்தாதிநிதவலைதான் பிரமாதிகடவுள
ரிருக்காதிவேதமுனிவ

பிபன்னாரியகணைநர் கலைதரித்தர்க
ளிசவிமதியாதியோர்கள்
ளர்தருவர்கின்னரர்கள் மற்றையர்களியாவருங்
கைதொழுவித்திடுதெய்வமே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (எ)

தன்றுமறியாமனது பலிகொடுத்தேன் கர்ம
நாட்டதேவதைகளில்லை
திரியவிறைசாக்கமிந்த வாதையாமுணக்கே
தொழும்பான் பயப்பட்டேகர்
குன்றுறைநீசென்றனி நைவேத்தியப்பாணை
னெக்குமதிதூபதீப
மொருகாலமன்றிநா சதாகாலபூசையா
லொப்புவித்தேன் கருணைகூர்
தெள்ளிமறையடியிட்ட வழுதப்பிழம்பே
தெளிந்ததேனொளிவியே
திவ்யாசமியாவுந் திரண்டொழுகுபாகே
தெவிட்டாதவானந்தமே
கன்னலுநிலுதியே மெள்ளமெளவெளியாய்க்
காக்கவருகல்லவுறவே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (அ)

உடல்குழைமூழல் வன்பெலா நெக்குருகயிழ்ந்தீர்க
ளூற்றெனவெதும்பியூற்ற

ஆசிகாந்தத்தினைக் கண்டவூசல்போலவே
    யோருறவுமுன்னியுன்னிப்
படபடெனநெஞ்சம் பதைத்தாண்டுக்குறப்
    பாடியாடிக்குதித்துப்
பனிமதிமுகத்திலே நிலவனையபுன்னகை
    பரப்பியார்த்தார்த்தெழுந்து
மடலவிழுமலரனைய கைவிரித்துக்கூப்பி
    வானேயவானிலின்ப
மழையேமழைத்தாரை வெள்ளமேநீடூழி
    வாழியெனவாழ்த்தியேத்துங்
கடன்மனை திறந்தனைய வன்பரன்புக்கெளியை
    கன்னெஞ்சனுக்கெளியையோ
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
    கருணாகரக்கடவுளே. (சல)

இங்கற்றபடியங்கு மெனவறியுநல்லறிஞ
    ரெக்காலமும்முதவுவா
ரின்சொறவுறுர்பொய்மை யாமிக்குரையா
    ரிரங்குவார்கொலைகள்பயிலார்
சங்கற்பசித்தரவ ருள்ளக்கருத்தினுறை
    சாக்ஷிநீயிகபரத்துஞ்
சந்தானகற்பகத் தேவாயிருந்தே
    சமஸ்தவின்பமுமுதவுவாய்
சிங்கத்தையொத்தென்ப் பாயவருவினையினைச்
    சேதிக்கவருகிம்புளே

சித்தர்குலத்திமிர மகலவருபானுவே
    தீனனேன்கரையேறவே
சமைத்ரபோராசை வெள்ளத்தின்வளரருட்
    ககனவட்டக்கப்பலே
குருதர்பசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
    கருணாகரக்கடவுளே. (௧௦)

சித்தர்கணம்.

திக்கொடுதிகந்தமும் மனவேகமென்னவே
    சென்றேருடியாடிவருவீர்
செம்பொன்மகமேருவொடு குணமேருவென்னவே
    திகழ்துருவனாளவரையி
யுக்ரமிகுசக்ரதர னென்னநிற்பீர்கையி
    லாமலகமிருமாசமனமா
வோரேழுடலையும் பருகவல்லீரிந்த்ர
    ஜாலகுமாரராவதுமே
சைக்கொளிபதந்தா வெடுத்துவிளையாடுவீர்
    ககனவட்டத்தையெல்லாங்
கவிகைபொருத்திபே யட்டகுலவெற்பையுங்
    காட்டுவீர் மேலுமேலு
மிக்கசித்திகளெலாம் வல்லநீரடிமைமுன்
    வினைகவருசித்தியிலையோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகசித்தர்கணமே. (க)

பாட்டளிதுதைந்துவளர் கற்பகநன்னீழலைப்
பாரினிடைவரவழைப்பீர்
பத்மநிதிசங்கநிதி யிருபாரிசத்திலும்
பணிசெயுந்தொழிலாளர்போற்
கேட்டதுகொடுத்துவர நிற்கவைப்பீர்பிச்சை
கேட்டுப்பிழைப்போரையும்
கிரீடபதியாக்குவீர் கற்பாந்தவெள்ளமொரு
கேணியிடையுறவைப்பீர்
கோட்டினையொடித்தா யிரத்தெட்டுமாற்றாக
வொளிவிடும்பொன்னாக்குவீர்
உரகனுமிளைப்பாற யோகதண்டத்திலே
யுலகுசுமையாகவருளான்
மீட்டிடவும்வல்லநீ ரென்மன[illegible]
மெழுகாக்கிவைப்பதரிதோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௨)

பாரொடுகனீராதி யொன்றோடொன்றுதவி
பற்றிலயமாகும்போழ்து
பரவெளியின்மருவுவீர் கற்பாந்தவெள்ளம்
பரந்திடினு நழுவீரே
நீரினுறைவண்டாற் றுவண்டுபோல் யோகத்திலே
நிற்பீர்விகற்பமாகி
நெடியமுகிலேழும் பரந்துவருமேலை
நிலவுமதிமண்டலமதே

பூசெனவிளங்குயிர்ப் பிரபஞ்சமுடிவிற் கிடை
யூர்திபருளா லுலவுவி
ருவக்கள்கீழ்மேல வாகப்பெருங்காற்
றலைவினைத்துணையினென்
பேருமெனவசையாம லிற்கவல்லீருபது
மேதக்கசித்தியெனிற்கா
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௯)

என்னரியபிறவிதனின் மானுடப்பிறவிதா
னரியதிலும்மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினெவ்வெப்பிறவிவாய்க்குமோ
வேதுவருமோவறிகிலேன்
கன்மகனிலத்துதா னுள்ளபொழுதேயருட்
கனவட்டத்தினின்று
காலூன்றிநின்றுபொழி யானந்தமுகிலொடு
கலந்துமதியவசமுறவே
பன்னுமதநன்மையிந் நிலைபதியுமட்டுமே
பதியாயிருக்கதேகப்
பவுரிகுலையாமலே சௌரிகுண்டலியாயி
பண்ணவிதனருளினாலே
விண்ணிலவுமதியமுத பொழியாதுபொழியவே
வேண்டுவேனுமதடிமைநான்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௰)

பொய்திகழுமுலகநடை யென்சொல்கேனென்சொல்
    பொழுதுபோக்கேதென்னிலோ [கேன்
பொய்யுடனிமித்தம் புசிப்புக்களைந்திடல்
    புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவமலாமலொரு செய்தவமதில்லையே
    கண்கெட்டபேர்க்கும்வெளியாய்க்
கண்டதிதுவிண்டிதைக் கண்டிந்துநிற்றலெக்
    காலமோவதையறிகிலேன்
மைதிகழுமுகிலினங் குடைநிழற்றிடவட்ட
    வரையிநெடுசெம்பொன்மேரு
மால்வரையினுச்சியிற்கூடும் யோகதண்டக்கோல்
    வரைந்துசயவிருதுகாட்டி
மெய்திகழுபட்டாங்க யோகபூமிக்குள்வளர்
    வேந்தரேகுணசாந்தரே
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. ([illegible])

கேசூரகமுதலான சதுரங்கமனமாதி
    கேள்வியினிசைந்துநிற்பக்
கொடிகொண்டதலமாறு மும்மண்டலத்திலுங்
    கிள்ளாக்குசெல்லமிக்க
தேசவிதமாய்நின்ற நாதங்களோலிடச்
    சிங்காசனாதிபர்களாய்த்
திக்குத்திகந்தமும் பூரணமதிக்குடை
    திகழ்ந்திடவசந்தகால

மிசையமலர்மீதுறை மணம்போலவானந்த
மிதயமேற்கொள்ளும்வண்ண
மென்னைக்குறியாத சிவராசயோகமா
யிந்த்ராதிதேவர்களெலாம்
விஜயஜயஜயவென்ன வாசிசொலவேசொலு
மிருக்குமாம்பெருமையெனிதா
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௬)

ஞானிலேபெண்ணிலே யென்போலவொருபேதை
யகிலத்திலிம்மிசையுள்ளதோ
வாடியசருகுபோ லோடியுழல்கின்றதனை
யடக்கியொருகணமேனும்யான்
காணிலேன்றிருவருளை யல்லாதுமௌனியாய்க்
கண்மூடியோரிமைக்
கட்டிக்கலாமதியை மூட்டவேமூலவெங்
கனலினையெழுப்பநினைவும்
பூணிலேனிற்றைநாட் கற்றதுங்கேட்டதும்
போக்கிலேபோகவிட்டுப்
பொய்யுலகநடையிலே நயிலுங்கடையான
புன்மையேனின்னமின்னம்
வீணிலேயலையாமன் மலையிலக்காகநீர்
வெளிப்படத்தோற்றல்வேண்டும்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௭)

கன்னலமுதெனவுருக் கனியெனவுள்ளூற
கண்டெனவுமடியெமக்குக்
கடவுளர்க்கடங்காத வமுதுகழுதுவேப்பொத்
கருத்திலெழுகின்றதெல்லா
பொன்னைநிகர்மானமாறி வெள்ளைப்பெருபதரீப
வீட்டுதயிலெழல்றயியூரீனுக்
இன்னல்பகராதவ யாசாலமேயேனிட்
ஒருத்தலவாகித்தவிமைப்பெ
சொல்லவசிவானபன் ஞானத்திருத்திகளெனக்
தோய்க்குநெறியேபடித்தீர்
சொல்லுமெய்யர்கீதன் சொன்னமெய்ஞானப்பீத்தி
தேடப்பெருமைகாரணமே
மின்னல்பெறுமிமிசொல்லனைச் சொரூபசொட்பனைமைக
னம் விகசிப்பதெந்தநாளோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே.

பொற்பிரிகிலைகாரில் மன்றுமிசைப்படைத்தசர்
போர்நிலைப்பொலிக்கொருவேத்
பொன்பரனெனன்சீர பூரியமருள்கொண்டு
பூரிக்கவினையோவைகா
வெற்படியினுச்சிவரா த்திமிலைபாகிறி
யிசைக்கிடமறைக்குமலா
விரவுபசுவிருமைசுவ கைதக்கிப்படாதி
ரிதயக்கவித்தெதிர்கலை

பற்பலவிதங்கொண்ட புவிகலேயிலுரியதா
படைத்தப்பரதாபமுறலாற்
பனிவெளிக்கண்புகுந்தாம னெடியவான்வெருட்கொடிய
பருமரவனங்கவர்ரும்
வெற்பினிடையுறைதனாற் றவராசசிங்கமென
மேவோருமைப்புகழ்வர்காண்
வேதாந்தசித்தாந்த சமரசநிலைபெற்ற
சித்தர்சித்தர்கணமே. (௯

அல்லதபேர்களோ கல்லார் சொல்லவர்கள்
கற்றமதியில்லாதவோ
கர்மத்தையென்சொல்வேன் பத்தியையென்சொல்லு
வேன் கைவல்யஞானநிதி
கல்லோருரைக்கவோ கர்மமுக்கியமென்று
நாட்டுவேன்கர்மமொருவ
ஞட்டிலொளிபரம ஞானமுக்கியமென்று
சாற்றுவேன் வடமொழியிலே
வல்லாரெனருந்தன்வர வுக்ராவிடத்திலே
வந்ததாவிவகரிப்பேன்
வல்லதமிழ்த்தேர்வரி னெனவடமொழியின்
வாசனையிலாதபுகல்வேன்
வெல்லாமலேலனையு மருட்டிவிடவைதவந்த
வித்தையென்முத்திதருமோ
